
# சிரித்திரன்




# CHIRITHIRAN

• A CARTOON MAGAZINE

1971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிரித்திரன்**

CARTOON MONTHLY சிரிப்புத் திங்கள் ஏடு

# சிறுகதைப் போட்டியும் ஆண்டு மலரும்

# பரிசு ரூபா 500-

■ 'சிரித்திரன்' ஒக்டோபர் இதழ் ஆண்டு மலராக வெளி வருகின்றது. ஈழத்தின் பிரபல எழுத்தாளர்கள் பலர் அதில் எழுதுகின்றார்கள். ஆண்டு மலரை முன்னிட்டுச் சிரித்திரன் இலக்கியப் போட்டி இரண்டினை நடாத்த இருக்கின்றது.

## (1) சிறுகதைப் போட்டி

★ முதலாம் பரிசு ரூ. 150/-

★ இரண்டாம் பரிசு ரூ. 100/-

★ ஈழத்தின் சமூகத்தைப் பிரதிபலிப்பனவாகச் சிறுகதைகள் அமைய வேண்டும்; அவை எழுத்தாளர்களது சொந்தக் கற்பனையாக, முன்பு எங்கும் வெளிவராததாக இருக்க வேண்டும்.

★ எவரும் பங்குபற்றலாம்.

## (2) 'சிரி'கதைப் போட்டி

★ முதலாம் பரிசு ரூ. 150/-

★ இரண்டாம் பரிசு ரூ. 100/-

★ நகைச்சுவைக் கதையாகவோ, உரைச் சித்திரமாகவோ இருக்கலாம். ஈழத்து மண்ணை நிலைக்களனாகக் கொண்டிருக்க வேண்டும்.

★ எழுத்தாளரது சொந்தப் படைப்பாக, முன்பு எதிலுமே வெளிவராததாக இருக்க வேண்டும்.

■ இப்போட்டிகளுக்குரிய கதைகள் யாவும் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதிக்குள் (30-9-71) ''ஆசிரியர், 'சிரித்திரன்' 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்கத்தில் 'சிறுகதைப் போட்டிக்கு' அல்லது 'நகைச்சுவைக் கதைப் போட்டிக்கு' எனக் குறித்துவிடுக.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்திரன்


ஆகஸ்ட் 1971
நகை: 7
சுவை: 10

# முன்முறுவல்

எஜமானி: காய்கறி, பல் செலவு எல்லாம் போக மீதிப் பணம் நாலு ரூபா இருக்க வேணுமே... எங்கே மீதிப் பணம்?

வேலைக்காரன்: ராக்ஷிக்குக் கொடுத்துவிட்டேன். இப்போ நான் பஸ்ஸில் பிரயாணம் செய்வதில்லை... சிகரட் புகைக்க முடியாது.

—0—



நோயாளி: தமிழனுடைய அரசியல் நிலைமையை நினைத்தால் போல எனக்கு இருதய நோய் வந்திட்டுது...... என்னுடைய இருதயத்தைப் பரிசோதித்துப் பாருங்க.

டாக்டர்: அதற்கு உன்னுடைய இருதயத்தைப் பரிசோதித்துப் பயனில்லை... அரசியல் வாதிகளின் நாக்கைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.

—0—

ஒருவர்: டாக்டர்! என் மனைவிக்கு நித்திரையில் எழும்பி நடக்கிற வருத்தம் இருக்குது.

டாக்டர்: அப்படியா?

ஒருவர்: ஆம் டாக்டர்... நேற்று இராத்திரி நித்திரையில் எழும்பி நடந்து தியேட்டருக்குப் போய்விட்டா.

—0—

ஒருவர்: நீ எழுதிய ''புற்று நோய்க்குக் காரணம் சிகரட்'' எனும் கட்டுரையைப் பத்திரிகையில் படித்தேன். மிகவும் நல்லாக இருந்தது.

எழுத்தாளன்: அதை எழுதி முடிக்க பத்து சிகரட் பக்கட் புகைத்து முடித்தேன்.

—0—

சோதிடர்: அட்டமத்துச் சனியன் உன்னைப் பரீட்சையில் சித்தியடையச் செய்யப் போகிறுன்.

மாணவன்: என்ன... அட்டமத்துச் சனியன் பெயில் பண்ணவல்லவா செய்யும்.

சோதிடர்: பாஸ் பண்ணச் செய்தால்தானே உத்தியோகத்திற்கு அலைக்க முடியும்.

—0—

Mrs. டாமோடிரன்



Mrs. டா: டார்லிங்! சங்கராபர்ண மென்பது நகை தானே?

Mr. டா: வை நொட்.

Mrs. டா: கொழும்புக் கடை எல்லாம் யூஸ் லெஸ். ஒரு கடையிலையும் சங்கராபர்ணமில்லையாம்.

—0—

ஒருவர்: என்ன... பரீட்சையில் பெயில் பண்ணிவிட்டு சிரித்துக் கொண்டிருக்கிருய்?

மற்றவர்: நம்ம காதலி பாஸ். அதுதான் இந்த சிரிப்பு.

சிரித்திரனில் வெளியாகும் கதை, கட்டுரை, நாடகங்களில் வரும் பாத்திரங்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே

தனிப்பிரதி -- 45
ஆறுமாதச் சந்தா--3-25
வருடச் சந்தா--6-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார் பவனி
## கருடன்

பாராளுமன்றங்களின் தாய் என்று கூறப்படும் பிரிட்டிஷ் பாராளுமன்றப்பக்கம் 'கருடன்' தலைகாட்டிய போது பலர் பரபரப்பாகப் பேசிக் கொண்டிருந்தது கேட்டது.

இந்த பாராளுமன்றங்களின் தாய்க்கு விரைவில் ஒரு கல்யாணமாகாத தாய் கிடைக்கப் போகிறாராம்.

பிரிட்டனில் ஆக வயதில் குறைந்த எம். பி. யாக வந்து வரலாறு படைத்த வட அயர்லாந்து எம். பி. செல்வி பேர்னடெட் டெவ்லினைப் பற்றித் தான் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். வயதில் குறைந்தவர் மட்டுமல்ல, 24 வயது பேர்னடெட்தான் பிரிட்டனின் கல்யாணமாகாமல் பிரசவிக்கப்போகும் முதலாவது எம். பி. யுமாவர். இது அவர் படைத்துள்ள மற்றொரு வரலாறு.

''சிசுவின் தந்தை பெயர் சொல்ல மாட்டேன். எனது நடத்தை எனது சொந்த விஷயம்'' என்று அவர் துணிவாகத் தான் பேசி இருக்கிறாராம்! ஆனால் பொது வாழ்வு என்று வந்துவிட்ட பின்னர், சொந்த நடத்தை பொது நடத்தை தானே என்று தான் லண்டனில் பேசிக்கொண்டார்கள்.

## கப்பித்தான்

லண்டனில் இப்போது கோடை ஆரம்பம். மதுபானக் கடைகளில் நொடிக்குள் 'பியர்' தீர்ந்துவிடுகிறது. தாகந் தீர்க்க எல்லோரும் 'பியரை'யே நாடுகிறார்கள். இங்கே இன்னொரு விஷயமும் கேள்விப்பட்டேன்.

பிரிட்டிஷ் பிரதமர் ஹீத்தை முன்னாள் பிரதமர் ஹரோல்டு வில்சன் 'பார்ட்டைம் பிறைம் மினிஸ்டர்' என்றே அழைக்கிறாராம்.

சிலர் 'கப்பித்தான் ரெட்' என்றும் கூப்பிடுகிறார்களாம்.

ஏனெனில் அவர் 'அரசாங்கம்' என்ற கப்பலின் சுக்கானைப் பிடிக்காத நேரம் எல்லாம் ஒரு நிஜக் கப்பலின் சுக்கானைப் பிடித்துக் கொண்டு திரிகிறாராம்.

விஷயம் வேறொன்றுமில்லை.

திரு. ஹீத்திடம் 41 அடி நீளமான 'மோர்ணிங் கிளவுட்' என்ற பெயருடைய கப்பல் படகு ஒன்று இருக்கிறது. அதில் நேரத்தைக் கழிப்பதென்றால் அவருக்கு கொள்ளை ஆசை. அரசாங்க வேலைகளையே புறக்கணித்துவிட்டு அவர் தனது கப்பலுடன் சுற்றுகிறார் என்பது குற்றச்சாட்டு.

அண்மையில் எலிசபெத் மகாராணி நடத்திய ஒரு விருந்துக்கு அவர் போகவில்லை — அவர் ஆகஸ்டில் நடக்கப் போகும் ஒரு படகுச் சவாரிக்கு தனது கப்பலில் பயிற்சி செய்து கொண்டிருந்தாராம்.

## படுக்கை அறை வானொலி நிலையம்

லண்டனில் இருந்து 'கருடன்' புறப்பட்டு ரோம் மீதாகப் பறந்து கொண்டிருக்கையில் ரோம் பொலீஸார் பெரிதும் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்தது.

''என்ன விஷயம்?'' என்று கீழே இறங்கி விசாரித்த போது அவர்கள் தமது சிற்றலை வரிசை ரேடியோ ரிசீவரைக் காட்டினார்கள். அந்த ரிசீவர் பொலீஸாருக்கென்று உபயோகப்படுத்தப்படுவது. பொலீஸார் பரஸ்பரம் பேசிக் கொள்ள பாவிப்பது.

ஆனால் அந்த ரிசீவரில் ஒரு இளம் பெண் பெருமூச்சு விடும் சத்தம், குறட்டை விடும் சத்தம், பாட்டுப் படிக்கும் சத்தம் எல்லாம் அடிக்கடி குறுக்கிட்டுக் கொண்டிருந்தது.

பொலீஸாரின் குழப்பத்துக்கு இதுதான் காரணம்!

''யாரும் உளவு பார்க்கிறார்களோ?'' என்று சந்தேகப்பட்டார்கள். ''பங்ளா தேஷ் வானொலி நிலையம் மாதிரி இரகசிய வானொலி நிலையம் ஏதும் இயங்குகிறதோ!'' என்று தலையைச் சொறிந்தார்கள்.

இறுதியில் தேடுதல் ஆரம்பமாகியது.

இறுதியாகப் பொலீஸார் ஒரு படுக்கை அறைக்குள் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்தார்கள். அங்கே கட்டிலில் அழகாகப் படுத்திருந்த யுவதி ஒருத்தி திடுக்கிட்டு எழுந்தாள். ''என்ன இது!'' என்று ஆத்திரத்துடன் சத்தம் போட்டாள்.

''அம்மணி! உங்கள் படுக்கை அறையைச் சோதிக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு பொலீஸார் ஆரம்பித்தார்கள். அறைக்குள் ஒரு மறைவான இடத்தில் சிறிய 'டிரான்ஸ்மிட்டர்' ஒன்று இருந்தது.

ஆனால் அந்த யுவதிக்கு அது எப்படி வந்தது என்பதே தெரியாது.

விசாரணைகளின் பின் விஷயம் அம்பலத்துக்கு வந்தது.

அந்த யுவதிக்கு ஒரு காதலன்.

பொகிபன்ஸி என்ற இடத்தில் இருக்கிறான். அவனுக்கு ரோமில் இருக்கும் தனது காதலி மீது சந்தேகம். அவள் தனக்குத் துரோகம் செய்கிறாளா என்று அறிவதற்கு அவன் செய்த உபாயம்தான் இந்த 'டிரான்ஸ்மிட்டர்'!

ஆனால் அவனுடைய ரிசீவரில் மட்டும் அது கேட்கவில்லை. பொலீஸாரின் ரிசீவருக்குள்ளும் புகுந்து அவர்களைக் கலவரப் படுத்திவிட்டது.

ஆனால் ஒன்று —

ரிசீவரில் என்றும் அந்நிய ஆடவனுடன் அப் பெண் பேசும் தொனி வந்தது கிடையாதாம்.

இதைப் பொலீஸாரும் ஒத்துக் கொள்கிறார்கள். காதலனும் ஒத்துக் கொள்கிறான்.

இப்போது 'லைசென்ஸ் இன்றி வானொலி நிலையம் வைத்திருந்தார்' என்று காதலன் மீது வழக்கு நடக்கிறது.

✻

---

(வானொலியில்) — இன்றைய காலநிலை பற்றிய அறிவித்தல்:-இன்று நண்பகல் வரை காலநிலை சீராக இருக்கும். மாலையில் இடிமுழக்கத்துடன்......

ஒரு குடும்பஸ்தர்:- (பயந்து ரேடியோவை நிற்பாட்டிவிட்டு) இது எனக்குத் தெரியாதா? இன்று சம்பள நாள்தானே. இதை வேறு சொல்லித் தொலைக்க வேண்டுமா?

— ச. ரா. பா. சர்மா —
கிரான்பாஸ்

---

மனைவி: பிள்ளைக்குப் பால் வாங்க காசில்லை.

கணவன்: பைத்தியக்காரி! நான் காலி பண்ணின சாராயப் போத்தில் எல்லாம் விற்று பால்மாவை வாங்கு. போ.

— ஜோக்கிரடீஸ்

---




ஒருவர்: ஏன் தம்பி, அந்தத் தலை எழுத்துச் சரியில்லாத பெம்பிளையைக் கலியாணம் பண்ணினாய்?

மாப்பிளை: நான் அச்சுக் கோர்க்கும் வேலை செய்பவன். எந்த எழுத்தையும் புரிந்து கொள்ளும் வல்லமை என்னிடமிருக்கு.

— அதிமதுரம்

---





# தமிழமுது

ஈழத்தில்
வெளிவரும்
தனித்துவமான
இலக்கிய ஏடு

வாசித்துவிட்டீர்களா?
விபரங்களுக்கு:-
தமிழமுது,
101, வேக்கந்தை வீதி,
கொழும்பு-2.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 3

## விடைகளும் முடிவும்

**இடமிருந்து வலம்**

1. தினகரன்
3. கங்குல்
4. அண்மை
5. கம்பர்
6. ஐந்து
7. யாக்கை
8. ராகு
12. காவேரி
13. பபிலோனியா
14. வதந்தி
15. தைப்பொங்கல்
17. லவன்
18. திட்டி
20. வஸ்திரம்
21. பனை
22. திகதி
23. மகுடி

**மேலிருந்து கீழ்**

1. திலகம்
2. கணபதி
9. குந்தி
10. கபிலவஸ்து
11. வனிதை
13. பல்லவர்
16. பொதி
19. முட்டி

பத்திற்குள் ஓர் எண் பலரையும் ஏமாற்றிவிட்டது. அதேபோல் சட்டியோ முட்டியோ என்றும் திணறியிருக்கிறீர்கள். முற்றும் சரியான விடையனுப்பிய இரு அதிர்ஷ்டசாலிகளில்

ப. விசுவலிங்கம்
மெனிக் பாம்,
செட்டிகுளம்.

க. செல்வமலர்
பத்தைமேனி,
அச்சுவேலி.

முறையே முதலாம், இரண்டாம் பரிசுகளைத் தட்டிக் கொள்கிறார்கள்.

ஒரு பிழையுடன் பல்லாயிரக் கணக்கான கூப்பன்கள் வந்துள்ளன. சிரித்திரன் வாசகர்களைச் சந்தோஷப்படுத்த வேண்டும் என்ற காரணத்தால் ஒரு பிழையுள்ள கூப்பன்களில் எட்டு அதிஷ்டசாலிகளுக்கு பரிசு வழங்கியுள்ளோம். பரிசிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிஷ்டசாலிகள் பின்வருமாறு:-

3-ம் பரிசு:- வே. மகேஸ்வரி,
வெடிமலைத் தோட்டம்,
நம்பொடை.

4-ம் பரிசு:- ஆ. இரத்தினராசா,
அச்சக ஒழுங்கை, கொக்குவில்.

5-ம் பரிசு:- ஏ. எஸ். சித்தீக்,
பூந்தோட்டம், மல்வானை.

6-ம் பரிசு:- கே. ரத்னராஜ்
முத்து மாளிகை, பருத்தித்துறை.

7-ம் பரிசு:- தொ. சூசை மிக்கேல்
புனித சின்னப்பர் குருமடம்
திருச்சிராப்பள்ளி-1,
தமிழ் நாடு,

8-ம் பரிசு:- க. இரேவதி
கந்தசேனை, நமுனகுல.

(9) எஸ். சி. ஏ. அஸீஸ்
ஏ/தல்ஹவெல, நம்பாவை.

(10) ஐ. இராஜேந்திரன்
ஜெகசோதி அன் கோ,
குருதெனியா.

பரிசு பெற்ற நேயர்களுக்கு ஆகஸ்ட்டிலிருந்து 'சிரித்திரன்' அனுப்பிவைக்கப்படும்.

குறுக்கெழுத்துப் போட்டிக் கூப்பன் செப்டம்பர் இதழில் இடம் பெறும்.

— ஆசிரியர்

## பூக்கிண்ணத்தில்....

அழகுணர்ச்சி எப்போதுமே மனிதனின் மனத்திற்கு ஒரு வித கிளர்ச்சியை ஏற்படுத்த வல்லது. வீட்டை அலங்கரிப்பதிலும், தன்னை அலங்கரிப்பதிலும் மனிதனுக்கு எப்பொழுதுமே ஒரு ஈடுபாடு இருந்து வருகின்றது சிலர் தாம் உணவருந்தும் மேசை மேலே அழகான பூக்களை பூக்கிண்ணத்தில் வைத்திருப்பார்கள். வீட்டு முகப்பில் அழகான குரேட்டன்ஸ், பூ மரங்கள் போன்றவற்றை வைத்துபோற்றி வளர்ப்பார்கள்.

ஆனல் இத்தனைக்கும் எதிர்மாருக ''மில்க் வைற் சோப்'' உரிமையாளர் தமது அலுவலக மேசை மீது பூக்கிண்ணத்தில் அழகிய பூக்களுக்குப் பதிலாக வேப்பம் இலைகளை வைத்திருக்கிறார். இது பற்றி அவரிடம் கேட்டபோது அவர் கூறிய பதில் ''வேப்பிலை எப்போதுமே மனிதனுக்கு நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கும். அதன் காற்றைச் சுவாசிப்பதால் உடலுக்கு மட்டு மல்ல உள்ளத்திற்கும் மகிழ்வைக் கொடுக்கும்.

இச்சமயத்தில் எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகின்றது. ஒரு யாத்திரீகர் கூட்டம் யாத்திரை செய்து வரும் பொழுது உடல் நலமின்றி இருந்தார்கள். அவர்கள் வைத்தியரை நாடிய பொழுது, இந்த யாத்திரிகர்கள் தமது யாத்திரையின் காலத்தில் ஒவ்வொரு இரவையும் புளிய மரத்தின் கீழ் கழித்திருப்பதாக வைத்தியர் அறிந்துகொண்டார். உடனே அவர் கூறிய மருந்து இது தான். ''நீங்கள் உங்கள் ஊருக்குப் போகும்பொழுது ஒவ்வொரு இரவையும் வேப்ப மரத்தின் கீழ் கழித்துக்கொண்டு செல்லுங்கள், உங்கள் நோய் தீருவதுடன் உங்களுக்குப் பழைய ஆரோக்கியமும் திரும்பும்.''

இதிலிருந்து ஒரு மனிதனுக்கு அழகை விட ஆரோக்கியம் தான் முக்கியம் என்பது தெரிய வருகின்றது. ஆரோக்கியம் இருக்கும் இடத்தில் தானே அழகு இருக்க முடியும். இதை ''மில்க்வைற் சோப்'' உரிமையாளர் நன்கு உணர்ந்திருக்கிறார் போலும்.

— மேனகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சலி



# கலைக்குரிசில் 'ஐயா'

கேட்டுக் கொண்டிருப்போரெல்லாம் தாளம் போட்டு ரஸிக்கும் இனிய கச்சேரி. இடை நடுவில் எவராவது ஒரு பக்கவாத்தியக்காரன் மாரடைப்பாலோ, வேறெதனாலோ மயக்கம் போட்டு விழுந்துவிடுகிறான். எப்படி இருக்கும் ரஸிகர்களுக்கு.

பயம் வேண்டாம் 'ஐயா' பக்கத்திலிருந்தால். ஆம், எந்த வாத்தியமென்றாலுஞ் சரி ஐயாவால் வாசிக்க முடியும். சர்வ வாத்திய கலா மேதை மட்டுமல்ல, சர்வ வாகனச் சாரதியும் கூட. ஆகாயக் கப்பல் கடற் கப்பல் போகட்டும், நில ஊர்தி எவையானாலும் செலுத்துவார்.

அவசர காலத் தொண்டர் (பொலிஸ்) என்றால் ஐயா அந்த உடையில் வந்து நிற்பார். தியேட்டர் நிர்வாகமா? செய்து காட்டியிருக்கிறார். இத்தனையும் அவரது பொழுது போக்கு.

நாடக மேடையில் ஆண், பெண் பாத்திரம் எதுவானாலும் ஐயா நடித்தவர். நடிப்போடு இரண்டறக் கலந்தவர் தான்.

இளவயதிற் பெண் வேடம் போட்ட போது, நாடக முடிவில் அவளை — ஐயாவை — ஒரு முறை நின்று பார்த்துவிட்டுப் போவோம் என்றிருந்த பருவ தாகம் மாறாத கிழவர்களை — அட இது ஆண் பிள்ளையா என்றறிந்த ஏமாற்றமுண்டாகி மீண்ட கதை பல.

செந்தழல் மேனி, சிரிப்புத் தவழும் உதடு, தனித்த ஒரு மிடுக்கான குரல், எவரோடும் அன்பாக, இனிதாகப் பழகும் கலைஞன்.

சிரித்திரனுக்கு முன்பு ஒரு முறை சிறப்புக் கட்டுரை தந்தவர் இந்த ஐயர். சொந்தப் பெயர் மு. கந்தவனம். இது பலருக்குத் தெரியாது. ஆனால் 'ஐயா' பெயர் சிலருக்கேனுந் தெரியாமல் போனதில்லை.


சினிமா வந்தது. சிறந்த நாடகக் கலைஞரை இருட்டடிப்புச் செய்தது. அந்த வகையில் பாதிக்கப்பட்டவர் ஐயா. ஆனால் அடங்காத கலைத் தாகம் கொண்டவர்.

அவர் இன்று நம்மிடை இல்லை. கூத்தாடும் கூத்தப் பிரானுக்குக் கலைத்திறன் போதிக்கச் சென்றாரோ என்னவோ.

ஆனால் அவரிடம் உலகம் எதிர்பார்த்த அத்தனையும், என்றும் வெற்றிடமே.

அவர் ஆன்மா சாந்தி பெறட்டும்.

— மன்னவன்



# 'மகா கவி'

தமிழ்க் கவிதைத் துறையில் தனக்கென ஓர் இடத்தை நிலை நாட்டி, ஈழத்துக் கவிதைத் துறைக்குப் புதியதொரு வனப்பைத் தந்த மகாகவி அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. தமிழ்த் தாய் தன் அருந்தவப் புதல்வரில் ஒருவரை இழந்துவிட்டாள். 'மகா கவி' அவர்கள் காலமான செய்தியைக் கேட்டு ஈழத்து எழுத்துலகம் கலங்குகின்றது.

ஈழத்தின் முன்னணிக் கவிஞர்களுள் முதல்வராக மகா கவி திகழ்கின்றார். மாணவராக விளங்கிய காலந் தொட்டு அரசாங்க மொழித் திணைக்களத்தின் தமிழ்ப் பகுதியின் தலைவராகப் பதவி வகித்து அமரராகும் வரையில் மகா கவியின் உயிர் மூச்சாகக் கவிதையே விளங்கியது. சாதாரண மக்களும் விரும்பிச் சுவைக்கும் வண்ணம் கவிதைகளை மகா கவி யாத்தார்.


மகா கவி ஒரு மக்கள் கவி; மகா கவி ஒரு புதுமைக் கவி. வள்ளி, கண்மணியாள் காதை போன்ற அவரது கவிதை நூல்கள் மகா கவியை, மக்கள் கவியாக எண்ண வைக்கின்றன; தமிழுக்குப் புதிய பா வகையை அறிமுகப்படுத்தும் குறும்பா எனும் அவரது கவிதை நூல் அவரைப் புதுமைக் கவியாக எண்ண வைக்கின்றன. இவை மட்டுந் தாமா? இல்லை... மகா கவி கவிதை நாடகங்கள் பலவற்றை ஆக்கி மேடையேற்றியுள்ளார். கோடை, புதிய தொரு வீடு என்பன அவரது கவிதை நாடகங்களாகும். மகா கவி தமிழுக்குச் செய்தவை அவரை என்றும் வாழ வைக்கும்; இன்னும் சில காலம் வாழ்ந்திருந்தால் தமிழ்க் கவிதை உலகு இன்னும் சிறப்படைந்திருக்கும்.

மகா கவி பழகுவதற்கு இனியவர்; சாந்தமானவர். அவரது பிரிவு தமிழுலகிற்கு ஈடு செய்ய முடியாத நட்டமாகும். அவருக்குச் 'சிரித்திரன்' தலைசாய்த்து அஞ்சலிசெலுத்துகிறான்.

—ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வீ. எம் ஜே. குயின்டஸ், 75/14, அனுவத்த ரோட், சிலாபம்.**

கே: மகுடியாரே! காவியங்களில் வரும் தெய்வீகக் காதலுக்கும், தற்காலப் பொழுது போக்குக் காதலுக்குமுள்ள வித்தியாசமென்ன?

ப: அது பத்தரை மாற்று. இது ஏமாற்று!

✻

**''மலரன்பன்'', வவுனியா.**

கே: கணவனை இழந்த மனைவிக்கும், காதலனால் கைவிடப்பட்ட காதலிக்குமுள்ள வேறுபாடு என்ன?

ப: ஒன்று காலனின் சதி. மற்றது காதலனின் சதி.

✻

**வேல்விழி சிவம், பண்ணாகம்.**

கே: காதல் முதலிற் பிறப்பது எப்படி?

ப: முதலில் மயக்கம், அடுத்தது தயக்கம், பின் இயக்கம்.

✻

**மு. செ. செல்வன், இரின் எஸ்டேட், கலகா.**

கே: உண்மையான அன்போடும், பாதை தவறாத பண்போடும் நாம் நடக்கும் பொழுது நம் மனதை ஏன் புண்படுத்தி வாழ சிலர் விரும்புகிறார்கள்?

ப: பஞ்சு நிறைந்த தலையணையில்தான் தலையை மோத விரும்புவார்கள். பாறை மீது யாரையா தலையை மோத விரும்புவார்கள்?

✻

**ஸ்ரீ, 53, சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

கே: டாக்டர் ஒருவரை மருமகனாக எடுத்தவர் நோயில் அவஸ்தைப்பட்டு மரணப் படுக்கையில் இருக்கும்போது என்ன நினைப்பார்?

ப: பெருந்தொகை சீதனம் கொடுத்து ஒரு டாக்டரை மருமகனாக எடுத்தும் அவரால் தன் உயிரைக் காப்பாற்ற முடியவில்லையே என்று நினைப்பார்.

✻

**பொ. கலைச்செல்வி, ஏழாலை.**

கே: ஒருவன் தனிமையிலே அழும்போது அவனைப் பைத்தியம் என்று உலகம் அழைப்பதில்லை. ஆனால் தனிமையிலே சிரிக்கும்போது மட்டும் அவனைப் பைத்தியம் என்று உலகம் கூறுகிறதே!

ப: கவலையில் கலந்துகொள்வதற்கு மனிதன் ஒரு போதும் விரும்புவதில்லை. ஆனால் சிரிப்பில் கலந்துகொண்டுசிரித்து மகிழ விரும்புகின்றான். அத்தகைய சிரிப்பை ஒருவன் தனிமையிலே கைக்கொண்டால் அவனை இந்த உலகம் பைத்தியம் என்று தானே அழைக்கும்.

✻

கே: வெங்காயத் தட்டுப்பாட்டினால் அதிக நஷ்டம் யாருக்கு?

ப: மாமிச போசன சாலைக்கு. இறைச்சிக்கு வெங்காயம் அதிகம் போடமுடியாதல்லவா

## பரிசுக் கேள்வி

**செல்வி ஸித்தி ஸுஹைறா, 40, டெம்பில் ரோட், கட்டுகுருந்த, களுத்துறை.**

கே: வாழ்க்கையில் இலட்சியம் இருந்தும் நிறைவேற்ற முடியாத பெண்களின் கதி எப்படி இருக்கும்?

ப: வீணையை மீட்டத் துடிக்கும் கரங்களுக்கு விலங்கிட்டது போலிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே. எஸ். எஸ். மணியம்,
அச்சுவேலி.

கே: பெண்கள் காதை மூடி மயிர் விடுவதன் நோக்கம் என்ன?



ப: விசிலடித்தான் குஞ்சுகளின் கீதம் கேளாமல் இருப்பதற்கு.

❋

அ. இராஜபாலன், கோப்பாய்.

கே: சித்திரை மாதத்தில் புத்திரன் பிறந்தால் அக்குடி நாசம் என்கிறார்களே! தங்கள் கருத்து என்ன?

ப: அப்படியென்றால், எங்கள் தமிழ் அரசியல் வாதிகள் எல்லோரும் சித்திரை மாதத்திலல்லவா பிறந்திருக்க வேண்டும்.

❋

ஏ. எல். எம். சித்திக், 9, 1-ம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.

கே: உலகில் எல்லோரும் பணக்காரர்களாக இருந்தால்...

ப: நரகலோகத்தில் இடநெருக்கடியல்லவா ஏற்படும்!

❋

மௌலஜுட், நில் ரோட், தர்கா டவுன்.

கே: நீங்கள் சிவாஜி ரசிகர் என்று கூறுகிறேன். என் தோழி எம். ஜீ. ஆர். ரசிகர் என்று கூறுகிறாள். பந்தயம் பத்து ரூபாய் கட்டியிருக்கின்றோம். நீங்கள் யார் ரசிகர்?

ப: எம். ஜீ. ஆருடைய சிறந்த படங்களைப் பார்க்கும்போது நான் எம். ஜி. ஆர். ரசிகன். சிவாஜியினுடைய சிறந்த படங்களைப் பார்க்கும் பொழுது நான் சிவாஜி ரசிகன்.

❋

ஆணழகன், பி. பி. குளம், வவுனியா-11.

கே: மகுடியின் இசைக்கும் மனைவியின் தலையணை மந்திரத்திற்கும் உள்ள வித்தியாசமென்ன?

ப: மகுடியின் இசைக்கு நாகம் ஆடும். மனைவியின் இசைக்கு நாதன் ஆடுவான்.

❋

அடம்பனூர் இளவல், மகா வித்தியாலயம், அடம்பன்.

கே: அக்காலக் கவிஞர் பெண்கள் நிலவைப் போன்றவர்கள் என்றார்கள்... இக்காலக் கவிஞர் பெண்களை என்னவென்று சொல்கிறார்கள்?

ப: அன்று ஒரு நிலவிற்கு ஒப்பிட்டார்கள். இன்று ஆயிரம் நிலவிற்கு ஒப்பிடுகிறார்கள். "ஆயிரம் நிலவே வா......"

❋

எம். எஸ். காஜா நஸீமுத்தீன், நஸீமா விலா, 185, யோனகபுர, திக்குவல்லை.

கே: சிரித்திரன் வாசகர்களாகிய எங்களை எப்படி ஆதரிக்கிறீர்கள்?

ப: கள்வனுற் திருடக்கூடிய பொன்னகை தராது, புன்னகை தருகிறோம்.

❋

பொ. தவராசா, 'உடையார் வாசா', பருத்தித்துறை.

கே: தமிழன் தலை நிமிர்ந்து வாழும் காலம் எப்போது வரும்?

ப: கோவில் திருவிழாக் காலம் வரும். வாணவேடிக்கையை தலை நிமிர்ந்து பார்ப்பானல்லவா?

❋

ச. சபாநேசன், காரைநகர்.

கே: பெண்கள் ஏன் தலையில் பூ வைக்கிறார்கள்?

ப: பூவை என்று பெண்களை அழைப்பதால் பூ வைக்கிறார்கள்.

❋

ஏ. எம். எம். சைபுடீன், மாத்தளை.

கே: சிகரெட் புகைப்பதால் ஐடியா வருமாம். உண்மையா?

ப: கான்சர் வருவது உண்மை.

❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் சொல்கிறது!

# உலகம் சொல்கிறது!

[சிரித்திரன் விசேட நிருபர் சேகரித்தவை]

(இடம்: பஸ் தரிப்பு நிலையம்)

மாடசாமி: சார்... கந்தப்பு சார்...... எத்தனை நாளாப் போயிடிச்சு உங்களைப் பார்த்து... ஆமா என்ன சார் சிரிச்சுக்கிட்டே இருக்கி றீங்க...

வேணுகோபால்: யோவ்... நான் சிரிச்சுக்கொண்டு தான் இருப்பன்...... அவ்வளவு சந்தோஷம்......

மாடசாமி: ஏன் சார் சந்தோஷம்... வெங்காயம் கிடைச்சு துங்களா?

வேணுகோபால்: இல்லே...... இலங்கைத் தமிழ்ப் பட உலகிலே ஒரு விடிவெள்ளி...

மாடசாமி: இலங்கையிலே தமிழ்ப் படமா? பூ...!!

வேணுகோபால்: இப்படித்தான் நானும் நினைச்சனுன்... மாடசாமி...... சூட்டிங் பார்த்தேன்... குத்துவிளக்கு சூட்டிங் பார்த்தேன்......

மாடசாமி: குத்துவிளக்கா... தமிழ்ப்படமா?

வேணுகோபால்: ஆமாம்...... குத்துவிளக்கு... வி. எஸ். ரி. பிலிம்ஸ் தயாரித்தளிக்கும் குத்துவிளக்கு...... நீ நம்ப மாட்டாய்...... பார்த்துக் கொண்டிருக்கும் போது என்னையறியாமலே கண்ணீர் வந்திட்டுது... லீலா நாராயணன் என்ற ஒரு பெண் கதா நாயகியாய் நடிக்கிரு...... தனக்கு வாழ்வு கிடைக்காதா என்ற ஏக்கத்தோடு, அந்த ஏழைக் குடும்பத்திலே நடக்கின்ற எத்தனையோ துக்ககரமான சம்பவங்களையெல்லாம் தாங்கிக் கொண்டு பெண்மைக்கு பெருமை கொடுக்கும் ஒரு உணர்ச்சி நிறைந்த பாத்திரத்தை அப்படியே என் கண் முன்னல் கொண்டு வந்து நிறுத்திப்போட்டோ......

மாடசாமி: என்னுலே நம்ப முடியவில்லையே...

வேணு: மாடசாமி...... நான் கூடத்தான் நம்பவில்லை...... ஆனல், சூட்டிங் பார்த்த பிறகு நம்ப வேண்டி வந்திட்டுது... எங்கள் கலை, எங்கள் கலாச்சாரம் என்று சொல்கின்றவர்களுக்கு இதோ நாங்கள் தரும் பரிசு குத்துவிளக்கு என்று வி. எஸ். ரி. பிலிம்சார் துணிந்து சொல்லலாம்......

மாடசாமி: அப்படிண்ணு நம்ம பொண்ணுகளுக்கு ஒரு சான்ஸ் எண்ணு சொல்லுங்க...

வேணு: சான்ஸ்சா... தம்பி... குத்துவிளக்குப் பார்க்கப் போறவர்கள் அதுவும் பெண்கள் நிச்சயமாக அழத்தான் போகிறுர்கள்... நானே அழுதேன் என்றுல்......

மாடசாமி: நீங்கள் அந்த நாட்களில் நாடகத்திலே பெண் வேஷம் தானே சார் போட்டீங்க......

வேணு: அதெல்லாத்தையும் ஞாபகப்படுத்தாதே... நாங்கள் நடிச்சது ஒரு நடிப்பா...

மாடசாமி: அப்படிண்ணு குத்துவிளக்கிலே நடிக்கிறதுதான் நடிப்பெண்ணு சொல்றீங்க...

வேணு: நிச்சயமா...... தமிழ்ப் படக் கலையை இலங்கையிலே வளர்க்க முன் வந்திருக்கிற வி. எஸ். ரி. பிலிம்சார் ஒரு குத்துவிளக்கில்லை... ஆயிரம் குத்துவிளக்குகளாலே இலங்கைத் தமிழ்ப் பட உலகை ஒளிமயமாக்க வேண்டும். இதுதான் என் ஆசை.

மாடசாமி: நிச்சயமா நிறைவேறும் சார்...

★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களுக்கு இடையே மட்டுந்தானா பேதம்? ஒரே கொடியில் மலர்ந்த இரு பூக்களில் பேதம் எப்படி ஏற்பட்டது? இக்கதை இவற்றிற்கு விடை தருகின்றது.

# பேதகம்

■ யோகேஸ் ஐயாத்துரை ■

வெளியே பனி கொட்டியது. பாயைத் திண்ணையில் விரித்த வேலாயுதம் குளிரிலிருந்து தன்னைப் பாதுகாக்கும் பொருட்டுத் திண்ணையை மறைத்து ஒரு சாக்கை கட்டினான்,

'விடிந்ததும் செய்வதற்கு எத்தனையோ வேலைகள், மலை போலக் காத்திருக்கின்றன. நாளைக்குப் பட்டினத்தில் இருந்து அண்ணை வரப்போறான் குடும்பத்தோடு !......ம்...எனக்கு விதிச்சவிதி அவன்ரை தோட்டம் துரவுகளைப் பார்ப்பதும், அவன் கொடுக்கிற பிச்சைச்சம்பளத்திலை சீவியம் செய்யிறதும் தான் தொழில்! நாளைக்கு வெள்ளனமே எழும்பி அவன்ரை வீட்டைத் துப்பரவாக்கவேணும்!

லாந்தர் விளக்கைக் குறைத்து விட்டுப் படுக்கையில் சரிந்தவன், மனைவியிடம் 'நான் எழும்ப மறுத்தாலும் எழுப்பி விடு!' என ஒருகுரல் கொடுத்து விட்டுப் படுத்துக்கொண்டான்.

நித்திரை வந்தால்த்தானே? எங்கோ ஒருசேவல் கூவி ஓய்ந்தது.

திடுக்கிட்டெழுந்து வேலாயுதம் லாந்தர் விளக்கைத் தூண்டிவிட்டு பாயை சுருட்டி வைத்துவிட்டு வெளியே வந்தான். உடம்பில் ஓடும் இரத்தத்தை எல்லாம் உறையைச் செய்யும் பனி வெளியே கொட்டிக்கொண்டிருந்தது. சால்வையால் உடம்பை போர்த்துக்கொண்டு குடிசைக்கு அயலிலேயிருந்த கல் வீட்டை நோக்கி நடந்தான்.

வீடுவாசல் எல்லாவற்றையும் கூட்டித் துப்புரவாக்கினான். வருபவர்கள் பட்டினவாசிகள், தூசிக்காற்றைச் சுவாசித்தாலும் துப்புரவு என்று சாகிறவர்கள். ஆகவே, விளக்குமாற்றை எடுத்து ஒருதூசி, துரும்புவிடாமல் கூட்டினான். தண்ணீர் அள்ளிப் பழக்கமில்லாதவர்களுக்குத் தண்ணீர் அள்ளித் தொட்டியில் நிரப்பினான்.

'பல பல' வென்று விடியவும், புதிய ஒரு கார் வந்து வீட்டின்முன் நிற்கவும் சரியாகவிருந்தது. கார் வந்து நின்ற சத்தம் அவனுக்குப் புத்துணர்ச்சியை ஊட்டியது. 'கேட்டை'த் திறந்து விட்டான். மரியாதைக்காக அஞ்சி எழும்பி நின்றான்.

கதை அமுதம்

கப்பல்போன்ற அக்காரை வெகுவேகமாக அண்ணன் மகன் ஓட்டி வந்தான். காருக்குள் வேலாயுதத்தின் தமையன், மனைவி, மக்கள் காதைக் கழுத்தைக் கம்பளிச் சட்டைகள் 'மப்ளர்'களால் மூடிக்கொண்டு மலையேறும் கோஸ்டியினர் போலக் காட்சியளித்தனர்.

பணிவாகப்போய் நின்ற வேலாயுதத்திடம், அவன் மேற்கொண்டு என்ன செய்யவேண்டுமென உணர்த்துபவன்போல 'டிக்கி'யைத் திறந்துவிட்டு, உள்ளே சென்று விட்டான். பாஸ்கர்.. அவன் அண்ணன் மகன். 'டிக்கி'க்குள் கிடந்த பொருட்களை ஒவ்வொன்றாக இறக்கி வைத்த வேலாயுதத்திற்கு எத்தனையோ கட்டளைகள் இட ஆயத்தமாயிருந்தார். அண்ணனார் பட்டிணத்திலிருந்து வந்து சகோதரனைச் சுகம் விசாரிக்காவிட்டாலும், ஓர் புன்னகையைக்கூட உதிர்க்க அவருக்கு மனம் வரவில்லை.

---



ஒருவர்: உன்னோடு இருபது வருஷமாகக் கோபித்து இருந்த மகன் ஊருக்கு வந்திருக்கிறான். இப்போ அவன் உன்னோடு ஒற்றுமை யாயிட்டான் போல.

மற்றவர்: இந்த வெங்காயம் எங்களைஒற்றுமையாக்கி யிருக்கு. என்னிடம் கொஞ்ச வெங்காயம் எடுத்துக் கொண்டு போக வந்திருக்கிறான்.

— யோஜனா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒருவர்: ஏனப்பா நீ கஷ்டப்பட்டு உழைத்து பணக்காரனா வந்தாலென்ன?

பிச்சைக்காரன்: நேர்மையாக உழைத்து பணக்காரனாகினாலும் கள்ளக்கடத்தல் அபின் வியாபாரத்தில் தான் பணக்காரனாகினானென்று நம்ம சமூகம் சொல்லும்...அதிலும் பிச்சைக்காரனா இருப்பது நல்லது.

---

'என்னப்பா வேலாயுதம்! தோட்டத்தை இந்த நிலையிலை வைச்சிருக்கிறாய்? வயலிலை நட்ட விளைச்சலை நல்லாய்ச் செய்யவில்லையாமே? இவற்றினாலை வர்ற வரும்படி, வருமானவரிகட்டவே போதாமல் இருக்கு! வித்துவிட்டால் என்னென்று பார்க்கிறேன்...'

வேலாயுதத்திற்குத் தமையனாரின் பீடிகை விளங்கிவிட்டது. ஒவ்வொருமுறையும் இப்படிக் கதைத்துத்தானே அவன் சம்பளத்தைக் குறைத்துக்கொண்டு வந்தவர்.

வேலாயுதம் மௌனியாக நின்றான்.

அப்போது தமையனின் தர்ம பத்தினி வேகமாக ஓடிவந்தாள்.

'இஞ்சேருங்கோ, உங்கடை தம்பி செய்த வேலையைப்பார்த்தியளே...? என்ன அழகான செடிகள்! பட்டினத்திலை எவ்வளவு பாடுபட்டு வளக்கிறார்கள்! எங்களை ஒரு சொல் கேட்காமல் வெட்டிப்போட்டாரே? முன்பக்கமெல்லாம் நடவேண்டுமென்றும், வீட்டிற்கு 'கக்டஸ் வில்லா' என்று பெயரிடவேண்டுமென்றும் எண்ணியிருத்தேனே? உங்கடை தம்பி எல்லாத்தையும் தறிச்சுப் போட்டாரே?'

தமையன் மனைவியின் குற்றப் பத்திரிகைக்குரிய காரணம் வேலாயுதத்திற்கு விளங்கியது. அவர்கள் வீட்டுக்கொல்லையில் கள்ளிச்செடிகள் பற்றையாக வளர்ந்திருந்தன. அவற்றை வேண்டாத குப்பையென்று வேலாயுதம் வெட்டிப் போட்டிருந்தான், மனைவியின் அருமை அவருக்குத்தான்தெரியும்.

கள்ளிச்செடி முன்பக்கமெல்லாம் போடவேண்டும் என உத்தரவு கொடுத்தார் தமையனார், அதோடு மட்டும் நில்லாது, அதற்கு வேண்டிய எரு, பசளை பற்றிப் பெரிய பிரசங்கமே நிகழ்த்தினார். அந்த உதவாச் செடிக்கு எவ்வளவும் செலவழிக்கத் தயாராகவிருந்தனர் கணவனும் மனைவியும்.

அமைதியை நாடி வயலை நோக்கிச் சென்றான். எதிரில் இன்னொரு தலையிடி காத்திருந்தது.

வயல்வரம்பில் நடந்த வேலாயுதம், தமையன் மக்கள் ரான்சிஸ்டர்' ரேடியோவுடன், வருவதைக் கண்டான்.

'என்ன தம்பி! காற்றுவாங்கவோ...?' என மரியாதைப் பன்மையில் விசாரித்தான்.

'நேரம்போக வழியில்லை! இந்தரேடியோவும் இல்லை என்றால் போர் அடித்துவிடும்!.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்தையும், குடும்பத்தையும் பற்றித் தமையனரிடம் விசாரிக்கத் துணிவற்ற வேலாயுதம். மகனை விசாரிக்கத் தொடங்கினான். அவனோ வேண்டா வெறுப்பாகப் பதில் சொல்லிக் கொண்டு வந்தான்.

'வா அண்ணா! நேரமாகுது... 'காடினரோ'டு கதைத்துக் கொண்டிருக்கிறாய்? எமக்கு நல்லாக் கால் உளையுது!' என்றாள் அவன் தங்கை.

வேலாயுதத்திற்கு நெஞ்சிலே சவுக்காலே அடித்தது போலிருந்தது. சொந்தச் சிறிய தகப்பனைத் தோட்டக்காரன் என்று அழைக்கு மளவிற்குவந்து விட்டதோ அவன் நிலைபரம்?

இவை எல்லாம் நடந்தேறி விட்ட விஷயங்கள். இப்போது நினைக்கும்போது கூட அவன் நெஞ்சு வேதனையால் துடிக்கிறது. கள்ளிப்பால் கண்ணில்பட்டதுபோல, அண்ணன் குடும்பம் பட்டினம்போய் பல நாட்களாகியும் அவன் மனதில் அமைதி விளைவிக்கவில்லை.

எந்நேரமும் அவன் மனம் தன் நிலையையும் அண்ணன் நிலையையும் தராசு கொண்டு அளந்து கொண்டிருந்தது இருவரும் குடியிருந்த கோயிலோ ஒன்று அப்படியிருந்தும் அவர்கள் வாழ்வில் எத்தனை வித்தியாசங்கள்! அவன் மனைவி மக்கள் கஞ்சிக்கும், கந்தலுக்கும் ஏங்கும் நிலை. அவனோ ஓய்வொழியின்றிப் பாடுபடுகிறான்.


யாருக்காக...? அண்ணனுக்காக!

அவன் தமயன் வாழ்க்கை எல்லாவிதத்திலும் எதிர்த்துருவமாக அமைந்துள்ளது. இரு உடன் பிறந்த சகோதரர்களைக் கடவுள் ஏன் இப்படிப் படைக்க வேண்டும் என அவனால் எண்ணமிடாமல் இருக்க முடியவில்லை.

அவன் கஷ்டப்படப் பிறந்தவன்.

'இஞ்சேருங்கோ, என்ன இப்படி இடிந்துபோய் இருக்கிறியள்? எழும்புங்கோ...! நாளைக்கு நல்லூரானின் தேர்த்திருவிழா வல்லோ? இந்த வருஷமாவது என்னைக் கூட்டிக் கொண்டு போங்கோ? தம்பி பிறக்கும் போது நேர்ந்த நேத்திக்கடன் உண்டியலில் காசு சேர்த்து வைத்திருக்கிறேன்! என்று அவனை உலுக்கியதோடு, தனது ஆசையையும் வெளியிட்டாள், வேலாயுதத்தின் மனைவி.

ஒவ்வொரு வருஷமும்போல இந்த வருஷமும் தட்டிக் கழித்



ஒருவர்: பெரிய வீட்டைச் சீதனமாகக் கொடுத்தும் மாப்பிளை கராச்சில் தான் படுத்தெழும்ப விரும்புகிறார்.

மற்றவர்: அது பழக்க தோஷம்... அவர் கொழும்பில் கராச்சில்தான் பச்சிலரா இருந்த காலத்தில் வாடகை கொடுத்து இருந்தவர்.

—யோஜனா.




தரமான கதைகளுக்கு
சுவையான நாவல்களுக்கு
கருத்து செறிந்த கட்டுரைகளுக்கு
**கல்கி** படியுங்கள்

# மாத ஜோதிடம்

—தமிழ் மாத சஞ்சிகை—

ஜோதிடரின் உதவியின்றியே
ஜோதிடம் பார்க்க
சிறந்த மாத இதழ்.

த. தம்பித்துரை அன் சன்ஸ்,
யாழ்ப்பாணம். — கொழும்பு
போன்: 82878




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பான். ஆனால், சில நாட்களாகத் தன் அந்தஸ்தையும், தமையனாரின் அந்தஸ்த்தையும் ஒப்பிட்டுக் கொண்டிருந்த அவன் மனம், அவள் ஆசையை நிறைவேற்ற விரும்பியது.

2

நல்லூரை அடைந்ததும் வேலாயுதத்தின் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் ஆச்சரியம் தாங்கவில்லை. எத்தனை பெரிய கோயில் வானளாவிய தேர்; தேரின் அழகோ சொல்லத்தரமன்று! முருகவேளில் பதித்திருந்த வைரக்கன் மைல்கணக்கில் பிரகாசித்தது. தெய்வங்களுக்கு அணிந்திருந்த ஆபரணங்களோ விலை மதிப்பற்றவை. பார்க்கப் பார்க்க ஆச்சரியம் அதிகரித்துக் கொண்டேபோனது.

முதல் முறையல்லவா?

ஒரே ஜனத்திரள்; இலங்கையில் சனத்தொகை அதிகரிக்கும் மின்வேகத்திற்கு ஒரே எடுத்துக் காட்டாக விளங்கியது.

அர்ச்சனைக்கும் காசை நீட்டினான் வேலாயுதம்.

'இஞ்சை காசு வாங்கிறதில்லை! போய்த் 'துண்டு' எடுத்துவா?... என்றார் அர்ச்சகர்.

'அரிச்சனைக்குக் காசு வேண்டாம் என்று கூறும் கோயிலும் உண்டோ' என்று வியந்த வண்ணம் கற்பூரத்தைக் கொளுத்தப் போனாள், அவள் மனைவி.

'கோயிலுக்குள்ளை கற்பூரம் கொளுத்தக் கூடாதென்று உமக்குத் தெரியாதே? என்று எரிந்து விழுந்தான், கோயில் ஊழியன் ஓவென வியப்பு மேல் வியப்பு.

எத்தனை பணக்காரக் கோயில்? எத்தனை அலங்காரங்கள்? உள்ளும் புறமும் கண்கொள்ளாக் காட்சி? தேர்க்கயிற்றைப் பிடித்திழுக்க எத்தனைபேர் போட்டி? பிரதட்டை எடுப்போர்எத்தனை? காவடி எத்தனை...?



ஒருவர்: என்னங்க சப்புக்கொட்டிறீங்க.

மற்றவர்: இல்லீங்க... வெங்காயக் குளம்பு நினைவு வந்துட்டுது வெங்காயக் குளம்பு சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு:

—அதிமதுரம்

---

சுவாமி தரிசனம் முடிந்ததும் கடலைப் பொட்டலங்களும் விளையாட்டுச்சாமான்களும்வாங்கிக் கொண்டு, முத்திரைச் சந்தையில் போய் பஸ் ஏறினார்கள். ஆச்சரியத்திலிருந்து ஒருவரும் விடுபடாத காரணத்தால் யாவரும் பேசும் சக்தியை இழந்திருந்தனர்.

பஸ் நாற்சந்தியில் வந்து நின்றது. வீட்டைநோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

வழியில் ஓர் அரசமரம்; அதனடியில் ஒரு வைரசூலம் வைரவரை மழை, வெயிலிலிருந்து காப்பாற்ற யாரோ ஒரு புண்ணியவான் ஒரு சிறு தகரத்தை மடித்து வீடு போலச் சூலத்தின் மேல் வைத்திருந்தான். சூலத்தின் அயலே ஒரு அகல்விளக்கு அது எண்ணெயையோ திரியையோ கண்டு நாட்கள் பல. சூலத்தின்மேல் ஒரு சிதம்பரத்தெம் பூ. அது ஒன்றே வைரவரின் அலங்காரம்; சார்த்துப்படி.

பழக்கம் காரணமாக வேலாயுதம், மனைவி மக்களும் வைரவர் முன் நின்று சற்றுக் கும்பிட்டனர். வணங்கிவிட்டுச் சிறிது இளைப்பாறும் பொருட்டு மர நிழலில் அமர்ந்தனர். மனைவி நல்லூரில் கண்டவற்றைச் சொல்லி அதிசயித்தாள்.

வேலாயுதத்தின் மனமோ திரும்பவும் அண்ணனையும்அவளையும் மதிப்பிடத் தொடங்கியது.

'அண்ணனெல்லாம் மனைவியை எத்தனை இடங்களுக்கு அழைத்துச் செல்கிறார்! நான் உன்னைக் கட்டினதற்கு இதுதானே முதல் தடவையாக அழைத்துச் சென்றிருக்கிறன்!' என்றான் வருத்தத்துடன்.

வேலாயுதத்தின் மனைவிக்கு எல்லாம் தெரியும்; அவன் கொஞ்ச நாட்களாகப் படும் வேதனையின் காரணமும் தெரியும். அவள் குறைவின்றிச் சிரித்தாள்.

'இஞ்சை பாருங்கோ, இந்த வயிரவரை...? இவரின் கோயிலையும், அலங்காரத்தையும் பாருங்கோ இவரின்ரை சகோதரர் தானே முருகன்? அவன்ரை கோயிலையும், அலங்காரத்தையும் தானே பார்த்தீங்கள்? இவர்களின் அந்தஸ்தில்தான் எவ்வளவு வித்தியாசம்...? தெய்வத்திற்கு இல்லாததையா தெய்வம் நமக்கு விட்டுவிட்டது...?

வேலாயுதம் அமைதியாகப் புன்னகைத்தான். அவன் கண்கள் வைரவசூலத்தின் மீது படிந்து நின்றது.

ஃ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகமேடையில்

# நகைச்சுவை

— பாலச்சந்திரன் —

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

எனது கல்லூரிக்கால வாழ்க்கை முடிந்ததன்பின் கொழும்புக்கு வந்த எனக்கு கொழும்பு யாழ்கலை அரங்கின் அங்கத்தவனாக சேர்ந்து பல நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இலங்கையின் சிறந்த நகைச்சுவை நடிகர்களாகக் கருதப்படும் திரு. சண்முகநாதன் (சானா) எஸ். எஸ். கணேசபிள்ளை, ரி. ராஜகோபால், எஸ். ராம்தாஸ் போன்றோருடன் இணைந்து நடிக்கும் சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட பல அனுபவங்கள் சுவையானவையாகும்.


'கறுப்பும் சிவப்பும்' என்ற நாடகத்தில் ஒரு கட்டம். கணேசபிள்ளையின் வீட்டிற்கு விருந்தாளியாக ராஜகோபால் வருகிறார். வீட்டிற்கு வந்தவரின் சாதியைப்பற்றி சந்தேகம் கொண்ட வீட்டுக்காரர் தன் மனைவி போட்டுவந்த கோப்பியை அவருக்கு கொடுக்க விடாமல் தடுத்துவிட்டு சோடாப் போத்தல் உடைத்துவரச் சொல்கிறார்.

இந்தக் கட்டத்திற்கென்று தயாராக சோடாப்போத்தல் ஒன்றை உடைத்து மேடையின் உட்புறம் வைத்திருந்தோம். வீட்டுக்காரரின் மனைவியாக நடித்த சகோதரி வைத்த இடத்தில் போய்ப் பாத்திருக்கிறார். யாரோ சோடாவையும் குடித்துவிட்டு வெறும் போத்தலையும் கொண்டு போய்விட்டார்கள், மேடையின் உள்ளே நின்ற என்னிடம் பதட்டத்துடன் வந்து 'சோடாப் போத்தலைக் காணவில்லை என்ன செய்கிறது' என்றார் அந்தச் சகோதரி. அங்கே நின்ற ஒருவரை பிடித்து சோடா வாங்கி வர அனுப்பினேன்.

இதற்கிடையில் மேடையில் இருப்பவர்களின் நிலைமை தர்ம சங்கடமாகி விட்டது. சோடாப் போத்தல் வராமல் வசனங்களை தொடர்ந்து பேசமுடியாத நிலை. திடீரென்று ரசிகர் மத்தியிலிருந்து பலத்த சிரிப்பு கேட்கவே சோடாப்போத்தல் வாங்கப் போனவரை பார்த்துக் கொண்டு நின்ற நான் மேடைக்குத் திரும்பினேன். அங்கே மேஜையில் வைக்கப்பட்டிருந்த கோப்பியை 'தான் எடுத்து குடிக்கவா' என்று ராஜகோபால்கண்களால் ஜாடை செய்ய. அதற்கு பதிலாக கணேசபிள்ளை கண்ஜாடையினாலேயே 'முடியாது... மனுஷி வரட்டும் பொறும் என்று பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

ஒருவாறு சோடா வந்தது 'பொடியனைக் கடைக்கனுப்பினேன் பிந்திவிட்டது' என்று சொல்லிக்கொண்டே வீட்டுக்காரரின் மனைவி மேடைக்கு வந்தார். இக்கட்டான நிலைமை நீங்கியது. தொடர்ந்து நாடகம் நடந்தது. ஆனால் இன்றைக்குக் கூட இருவரின் கண்ஜாடைகளை நினைத்தால் வரும் சிரிப்பை அடக்க முடிவதேயில்லை.

ஒருமுறை, என் நண்பர் ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்கி அவர் நடிக்கும் நாடகம் ஒன்றி



உபாத்தியாயர்: அமெரிக்காவை முதலில் கண்டுபிடித்தது யார்.

மணி: நான்தான் மாஸ்டர் கண்டுபிடித்தேன்.

உபாத்தியாயர்: என்னடா கேலியா பண்ணுகிறாய்?

மணி: கேலி ஒன்றுமில்லை மாஸ்டர். வகுப்புக்கு வந்ததும் உலகப்படத்தை நீங்கள் காட்டி அதில் அமெரிக்கா எங்கே இருக்கிறதென்று கேட்டதும் நான்தானே மாஸ்டர் முதலில் அதைக் கண்டுபிடித்தேன்.

—ஜகத்குரு.

---

னுக்கு வசனங்களை நினைவூட்டுவோனாக கடமையாற்ற வேண்டிய நிலைவந்தது. தற்கால தமிழ் படங்களைப்போல காதல் காட்சி சண்டைக்காட்சி, ஒன்று விடாமல் இடம் பெற்ற அந்த நாடகம் ராஜாராணிக் கதையா அல்லது சமூகக்கதையா என்று தீர்மானித்துக் கொள்வது மேடையில் கதைப்பிரதியுடன் நின்ற எனக்கே கஷ்டமாயிருந்ததென்றால் ரசிகர்களின் நிலைமை... பாவம் ஒரே பரிதாபம்தான்.

இடைவேளைக்கு முதல்நடைபெற்ற இறுதிக்காட்சியில் வயோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திபர் ஒருவர் விஷமூட்டப்பட்டு வாயிலிருந்து இரத்தம் சொட்ட (வாய் நிறைய சிவப்புமை வானிஷ்) துடிதுடியென்று துடித்து இறக்கிறுர். சோகப்பாடல் பின்னணியில் கேட்கிறது. பார்த்தார் ரசிகர்கள் சோகரசம் ததும்ப (இந்த நாடகத்திற்கு வர நேர்ந்ததே என) இருக்கிறுர்கள் போலிருக்கிறது. அவர்களை கொஞ்சம் மகிழ்விக்கவேண்டுமென நினைத்துவிட்டோ என்னவோ கோஷ்டி நடனத்தில் ஆடிய ஒரு நடிகையுடன் மேடையில் தோன்றினுர். பின்னணியில் இசைத்தட்டை போட்டார்கள் 'டிங்கிடிங்காலே' பாட்டுடன் அவரும் நடிகையும் பைலா நடனம் ஆடத் தொடங்கி விட்டார்கள்.

ரசிகர்களுக்கு ஒரே திகைப்பு. இதென்ன ஒரு புது நாடகம் என்று ஆச்சரியப்பட்டார்கள் போலிருக்கிறது. கையில் இருந்த சோடாப் போத்தல் அப்படியேயிருக்க வாயில் போட்ட கடலை அப்படியேயிருக்க அங்கங்கே நின்ற ரசிகர்கள் மெய்மறந்து(?) நின்றுர்கள். மேடையில் நின்ற நானும் நாடகப்பிரதி முழுவதும் இப்படியொரு காட்சி இருக்கிறதா என்று தேடிப்பார்த்து அலுத்துப் பேசாமல் பார்த்துக் கொண்டுநின்றேன்.

இதற்கிடையில் முதற்காட்சியில் துடிதுடித்து இறக்கும் வயோதிபராக நடித்தவருக்கு ஒரு ஆசை ஏற்பட்டுவிட்டது. டைரக்டரைப்போலதானும்'பைலா' ஆடமுடியும் என்று ரசிகர்களுக்கு காட்டவேண்டுமென்ற தாளாத ஆசைதான் அது. பொறுத்துப் பார்த்தார் முடியவில்லை, 'வார்னிஸ் பெயின்ற்' வாயோடு வந்து மேடையில் ஏறி அவரும் ஆடத் தொடங்கி விட்டார். மெய்மறந்து நின்ற ரசிகர்கள் இவரைக் கண்டதும் சுயஉணர்வடைந்து ஆரவாரித்தனர்.

இந்த நிலையில், மேடையில் ஆடிக்கொண்டிருந்த டைரக்டருக்கு கோபம் (அல்லது பொருமையா) வந்துவிட்டது. சாதாரண நடிகன் தன்னேடு சமதையாக 'பைலா' நடனம் ஆடவா என்று நினைத்துவிட்டார் போலிருக்கிறது. எனவே ஆடுவதையும் நிறுத்தாமல் ரசிகர்களுக்கு கேட்காதவாறு மெதுவாக 'உள்ளுக்குப்போடா, உள்ளுக்குப் போடா' என்று சொல்லிக் கொண்டு ஆடினுர். மற்ற நடிகரும் சளைத்தவரல்ல. 'போகமாட்டேன், சும்மாயிரும்' என்று சொல்லிக்கொண்டே ஆடினுர். இவர்களது சம்பாஷணையை மேடையில் நின்ற நான் தெளிவாகக் கேட்டு வந்த சிரிப்பை அடக்க முடியாமல் மேடையை விட்டு இறங்கியோடி மண்டபத்திற்கு வெளியே நின்று சிரித்துத்தீர்த்தேன் என்றுல் பார்த்துக் கொள்ளுங்களேன்...[

ஃ

---

ஐரோப்பாவின் சில பகுதிகளில் மாம்பழத்தை ''குளியலறைப்பழம்'' என்று பெயரிட்டு அழைத்துக் கொள்கிறுர்கள். மாம்பழத்தை நறுக்கித் துண்டுகளாகச் சாப்பிடலாம் என்ற விவகாரம் இவர்களுக்கு அறவே தெரியாது. கடித்துச் சுவைத்துத்தான் சாப்பிடுவார்கள். இவர்கள் உண்ணும்போது கை, வாய், உடம்பெல்லாம் மாம்பழச் சாற்றை ஒழுக விட்டுக்கொள்கிறுர்கள். இதனுல் ஒரு முறை உடம்பைக் கழுவிக் கொள்ள வேண்டியவர்களாக ஆகிவிடுகிறுர்கள். இவர்கள் மாம்பழத்தை குளியலறையில் வைத்து சாப்பிடுவதன் காரணம் இப்பொழுது புரிகிறதா?

— எடுத்தாளன்

---

உபாத்தியாயர்: மனிதருக்கும் மிருகத்துக்கும் உள்ள முக்கிய வித்தியாசம் ஒன்று கூறு பார்க்கலாம்.

சிறுவன்: மனிதனுக்கு கூப்பன் உண்டு மிருகத்துக்குக் கூப்பன் இல்லை.

—ஜகத்குரு.

---




'செங்கைஆழியானி'ன் நூல்கள் விற்பனையாகின்றன.

★ 'சிரித்திரன்' வாசகர்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்த நவீனம்—

**'ஆச்சி பயணம் போகிறுள்'** **விலை: 2/-**

★ படிப்போரைப் பிரமிப்பிலும் மகிழ்விலும் ஆழ்த்தும் சரித்திர நவீனம் |

**'நந்திக்கடல்'** **விலை: 2/-**

'விற்பனையாளர்களுக்கு 20% கழிவு தரப்படும்.

விபரங்களுக்கு: 'சிரித்திரன்', 67, பிறவுன்வீதி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்விப் பேப்பர் மட்டுந்தானா 'அவுட்?' ஏமாந்து போன மாணவ உலகத்தைச் சித்தரிக்கின்றது!**

# கேள்விப் பேப்பர் அவுட்

■ வை. யோகராசா ■

சுகாதாரம் முடிந்துவிட்டது. கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையின் கலக்கத்தில் ஒன்று தீர்ந்துவிட்ட திருப்தியேற்பட்டது. ஆனால் பெரும் கலக்கத்திற்குரிய மற்ற பேப்பர் நாளை நடைபெற இருக்கின்றது. மாலைத் தேனீருடன் வந்த எனது தாயார், 'நாளைக்கு என்ன பாடமடா' என்று என்னை வினவினார்.

''மற்ஸ்'' என அழாக் குறையாகக் கூறினேன். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த எனது தங்கை ''அண்ணனுக்கு நல்ல கள்ள மூளை; நாளைக்கு நல்லாகச் செய்வார்'' எனக் கூறினார். தேனீரை அருந்திவிட்டு வீட்டை விட்டு வெளியேறினேன்.

எனது மூளையின் ⅓ பகுதியின் கள்ளத்தன்மையை, முற்றாக வியாபித்துக் கொண்டு ரோட்டினில் நடந்து சென்று கொண்டிருந்தேன். உடுப்பிட்டிச் சந்தியை அடைந்தவுடன் பக்கத்திலுள்ள சிற்றுண்டிச்சாலையினுள் சென்றேன். அங்கு என்னுடன் படிக்கும் சக மாணவர்கள் ஒரு கையில் தேனீரும், மறு கையில் 'போர் ஏசும்' வைத்துக்கொண்டு மிக நெருங்கி இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தனர். என்னைக் கண்டதும் எனக்கொரு காப்பிக்கு ஓடர் கொடுத்த என் நண்பர்கள், தமக்கருகிலுள்ள கதிரையில் என்னை அமர்த்தினர்.

ஒரு நண்பன் தன் பொக்கெட்டுள் டுப்பிளிகெட் கணிதப் பேப்பர் இருக்கிறது என்றும், இன்னும் ஒரு நண்பனுடன் கதைத்து விட்டு இதனைக் காட்டுகிறேன் என்றும் கூறினான். அப்பலோவில் தான் இப்போது செல்கிறேனோ என நான் ஐயப்பட்டேன். என் நண்பனிடம் நான் உனது வீட்டிற்கு இரவு வாரன். சில வேளை 12 மணிக்கும் வீட்டுக்கு வருவன். நீ முழிப்பாக இரு. 12 என்ன? 1 மணிக்காவது வா...என்று கூறி பகோடாவிற்கு ஓடர் பண்ணினேன். காரணம், எழும்பிப் போகாமல் எப்பிடியும் அவன் பையில் தூங்கிக் கொண்டிருக்கும் டுப்பிளிக்கேற்றைப் பார்க்க வேண்டும். பகோடா இல்லை என எதிரொலித்தது. நண்பன் எழும்பினான். என்னைப் பார்த்துச் சொன்னான். ''இன்னும் கொஞ்சப் பேருக்கு சொல்ல வேணும். நான் போறன்.'' விடை பெற்றான். மற்ற நண்பர்களும் விடை பெற்றனர். என் மனந் துடித்தது. பையுள்ளிருந்தது கையுள் வரவில்லையே என்று கவலை கொண்டேன். நேரத்தைப் பார்த்தேன், சரியாக 6 மணி.

சரியாக ஏழு மணி. செக்கல் எண்டு சொல்லும் இருட்டு. ஓர் உருவம் சைக்கிளில் விரைந்து வருகிறது. என்னுடன் கதைத்தவரை அழைத்து ஏதோ குசு குசுவென்று கதைத்தார். பின் முழுப் பெற்றோலையுந் திறந்துவிட்ட மாதிரி ஸ்ராட் பண்ணிக் கொண்டு சென்றார். என்ன கதைத்தவர் என்று அறிந்தவுடன் உடுப்பிட்டிச் சந்தியை விட்டுப் போகவே மனமில்லை. என்னவென்றால் 'சரியா 9 மணிக்கு பேப்பர் கொண்டு வாறாராம். காசுக்கு ஆயத்தப்படுத்தட்டாம்.' என்னிடமுள்ள 5 ரூபாயை எண்ணிப் பார்த்தேன். சோதனை முடிய படத்துக்கு என்று வைத்திருந்தேன். இப்போது இந்த நல்ல காரியத்துக்குப் போகப் போகிறதே?



மணிக்கூட்டுக் கம்பி 12டை ஆமை வேகத்தில் சந்தித்துக் கொண்டிருக்க, ஓர் சத்தம் படலையில் கேட்டு எழுந்து சென்று பார்த்தேன். சைக்கிள் மேலே ஒய்யாரமாக நின்றபடி மற்ஸ் பேப்பரைத் தந்தான். ஆனால் எனக்கு எப்படிச் செய்யத் தெரியும்? அவனும் என்ரை நிலைமை தான். ''குருடனும் குருடனும் முட்டி மன்னித்துக் கொள்ளப்பா'' என்று வரதராஜனார் சொன்னபடி, இருவரும் ஒரு முடிவுக்கு வந்தோம். கடைசியில் ஊரிலுள்ள ஒரு பொடியனை நாடி ஓடி, அவனையும் எழுப்பி, செய்து காட்டும்படி சொன்னோம். எங்கள் நிலைமையைப் புரிந்தவர் 1 மணி என்றும் பாராமல் தன் அக்கம் பக்கத்திலுள்ள மாணவர்களையும் எழுப்பி, செய்து காட்டினார். ஆனால் எனக்கோ ஒன்றும் விளங்கவில்லை. என்னைப் போலுள்ள ஒரு ஜீவன் அவரைக் கேட்டுது; ''உந்தக் கணக்கை வடிவாக எழுதுங்கோ. நாங்கள் எழுதிப் பாடமாக்கிப் போட்டு நாளைக்கு எழுதுவம். ''சரியாக 2 மணி. நாங்கள் முழிப்பாக இருக்கிறோம். சிவராத்திரிக்குக் கூட நன்றாக நித்திரை கொள்வோம். ஆனால் இன்று நித்திரை வரவில்லை. ஒரு மாதிரி சேவல் கூவி விடிந்தது. இராத்திரிப் படித்ததெல்லாம் முடிந்தது மாதிரி இருந்தது. நினைச்சுப் பாத்தன். வரவில்லை. பின்பு ஒருக்கால் திருப்பிப் பாடமாக்கிப் போட்டு, சரியாக 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிக்கு சோதனைக் காலுக்குள் நுழைந் தோம்.

என் நண்பன் ஒருவன் வந்து, ''மச்சான் மூன்ரு வது கணக்கு'' என்று இழுத்தான். போய்ச்சு மூன்ரு வது கணக்கு மறந்து போனனே? சைக்கிளடிக்குஓடிப் போய் கூடைக்குள் ளிருந்த துண்டைப் பார்த்தேன். ஞாபகம் வந்திட்டுது.

சரியாக 8.30 மணிக்கு பேப்பர் தந்தார்கள். வடிவாகப் பார்த்தேன். ஏதோ எழுதின மாதிரிக் கிடந்தது. கண்ணைப் பிரட்டிப்பார்த்தேன். அது எழுதுகிற பேப்பர். மற்ஸ் பேப்பர் கொடுக்கத் தொடங்கினுர்கள். பரவாயில்லை பேப்பர் தந்தவுடனேயே எழுதிக் குடுத்திட்டுப் போறதுதானே என்று யோசித்த படி மற்ஸ் பேப்பரை வாங்கினேன். எழுத் தொன்றுந் தெரிய வில்லை. நல்ல வெள்ளைப் பேப்பர். குனிந்து கண்ணைக் கசக்கிப் போட்டுப் பார்த்தேன். உலகமே சுழன்றது. இரவு படித்த ஒரு கணக்கும் வரவில்லை. பேப்பர் பிழை எண்டு எழும்பிச் சொல்லட்டோ என்று யோசித்த என் மூளைக்கு! ஒரு குட்டுக் குட்டினேன். ஓ!!! என்று அழ வேண்டும் போல தோன்றியது. ஆனுல் மரியாதை இல்லை. என்னுடைய நிலைமையை உணர்ந்தோ அல்லது தெரிந்தோ என் பின்னுல் இருந்த பெண்ணெருத்தி இந்த நேரத்தில் என்னைப் பார்த்துச் சிரித்தாள். கஷ்டப்பட்டு நானும் சிரித்தேன். சுப்பவிசர் இதனைக் கண்டு ''தம்பி, உந்த மாதிரிச் சேட்டை விட்டால் கலைச்சுப் போடுவன். பின்னுல் திரும்பிப் பாராமல் எழுது'' என்று கூறிச் சென்றுர். கஷ்டப்பட்டு என் மற்ஸ் மூளையைத் திறந்தேன். ஆனுல் ஒரு கணக்குஞ் சரியாகச் செய்ய முடியவில்லை. ஏதோ என்னுலை ஆன மட்டும் பார்த்தேன். ஆனுல் ஒண்டு சொல்லுறன். ''நான் செய்த கணக்குகளை மற்ஸ் கண்டுபிடித்த பிதாக்காரர் போன்றவர்கள் பார்த்தால் நிச்சயந் தூங்கிச் சாவினம்.'' எல்லாம் புது முறைகள். எல்லாம் நான் கஷ்டப்பட்டுக் கண்டு பிடித்தவைகள்.

சிறிது நேரத்தில் —

என்னையறியாமல் மேசையில் நித்திரையில் லயித்தேன். என் மற்ஸ் பேப்பர் திருத்தப்படுவதைக் கனவில் கண்டேன். திருத்துபவர் முழுதும் சரியாகப் போட்டு, 100 மாக்ஸ் போட யோசித்து, ஒன்றுஞ் சைபரும் போட்டு விட்டு, அடுத்த சைபர் போடத் தொடங்க, இடையிலே நித்திரையைக் குழப்பினுர் சுப்பவிசர். கவலையோடு எழுந்தேன். பேப்பரைக் கட்ட உத்தரவிட்டார் சுப்பவிசர். பேப்பரைக் கட்டியபடி நிமிர்ந்து பார்த்தேன். மற்றவர்களை எழுப்பிக் கொண்டிருந்தார் சுப்பவிசர்.

ஃ

---

தாய்: மகனே! நீ பிரார்த்தனை செய்வது எனக்குக் கேட்கவில்லையே!

மகன்: உங்களுக்கு பிரார்த்தனை செய்யவில்லையம்மா. ஆண்டவனுக்குத்தான் பிரார்த்தனை செய்கிறேன்.

தாய்: ......?......?......

---

''இலங்கையிலுள்ள பிச்சைக்காரர்கள் எல்லோருமாக ஓர் சங்கம் அமைத்து அரசாங்கத்திற்கு ஓர் வேண்டுகோள் விடுக்க இருக்கின்றனர்.

போக்குவரத்து அமைச்சர் அவர்கள் இ. போ. ச. பஸ்களில் ஐந்து சத ரிக்கற்றை தடை செய்தது போல் நிதி அமைச்சரும் ஒரு சதம் இரண்டு சதம் போன்றவற்றை நாட்டின் புழக்கத்திலிருந்து இல்லாமல் செய்ய வேண்டுமாம்.

காரணம்: விலைவாசி ஏறி வரும் இவ்வேளையில் பிச்சை போடும் பிரமுகர்கள் இரண்டு சதத்திற்கு மேல் போடுகிறுர்களில்லையாம்.''

— ஏ. செல்வேந்திரராசா








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டிலே போர்!

— குட்டிமாமி —



அழகிய காலை வேளை. ஒரு காட்டின் நடுவே அமைந்திருந்த நீர்த் தடாகம் ஒன்றின் கரையில் நரி மாமாவும் கரடியாரும் அமர்ந்திருந்தார்கள். அந்த நீர்த் தடாகத்திலேயே, அக்காட்டிலுள்ள விலங்குகள் யாவும் நீர் அருந்துவது வழக்கம்.

அக்காட்டில் மிகவும் தந்திரமான பிராணி நரி மாமா ஆவார். அதனால், அவரையே அக்காட்டின் அரசனாக எல்லா மிருகங்களும் ஏற்றுக் கொண்டன. நரி மாமாவும் தனக்கு மந்திரியாகக் கரடியாரை நியமித்துக் கொண்டார்.

நீர்த் தடாகக் கரையில் அமர்ந்திருந்து காட்டின் நிர்வாகத்தை நரி மாமா கவனித்து வந்தார்.

''அரசே...'' என்று கரடியார் நரி மாமாவை மெதுவாக அழைத்தார்.

''என்ன மந்திரி?...'' என்று நரி மாமா கேட்டார்.

''காட்டில் வறட்சிக் காலம் வந்து கொண்டிருக்கிறது. இன்னும் சில நாட்களுக்குத் தான் இந்தத் தடாகத்திலுள்ள நீர் போதுமானது...அதனால்...''

''அதனால், என்ன மந்திரி? வேறு காட்டிற்குப் போக வேண்டும் என்கிறீரா?...'' என்று நரி மாமா கேட்டார்.

கரடியார் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''இல்லை, அரசே...! இத் தடாகத்து நீரை எம் இனத்தவரே அருந்தலாம் என்று ஒரு சட்டத்தைத் தாங்கள் பிறப்பிக்கவேண்டும்! எந்த ஒருபறவையும் இந்நீரை அருந்தாமல் தடுத்து விடவேண்டும்... அவ்வாறு தடுத்தால் வறட்சிக் காலத்திலும் எங்களுக்கு நீர் கிடைக்கும்'' என்றார் கரடியார்.

நரி மாமா சிறிது நேரம் யோசித்துப் பார்த்தார்; கரடியார் கூறுவது சரியெனவே மனதுக்குப்பட்டது. உடனேயே, அப்புதிய சட்டத்தைக் காடு முழுவதும் பறையறைவித்தார்.

'நீர்த்தடாகத்தில் பறவைகள் நீர் பருகக்கூடாது' என்ற சட்டத்தைக் கேட்ட பறவைகள் திகைத்துப் போயின. கொக்காரும், நாரையாரும் பயந்தே போனார்கள். காட்டிலுள்ள எல்லாப் பறவைகளும் அக்காட்டின் பறவை அரசனான வானம்பாடியிடம் சென்று முறையிட்டன.

''நீங்கள் கவலைப்படாது போங்கள். நான் இதற்கு உடனே ஒரு வழி கண்டு பிடிக்கின்றேன்.'' என்று வானம்பாடி கூறிப் பறவைகளை அனுப்பி வைத்துவிட்டு, நரி மாமாவிடம் வந்தது.

''அரசே, நீங்கள் இப்படிச் செய்தது சரியில்லை... இக்காட்டில் பரம்பரை பரம்பரையாகச் சீவித்து வரும் பறவைகளுக்குத் தடாகத்தில் நீர் பருக உரிமையில்லை என்பது தகாது...'' என்றது, வானம்பாடி.

''மிருகங்களுக்கு மன்னனை எனக்குப் புத்தி கூறும் நீ யார்...?'' என்று நரி மாமா ஊளையிட்டார்.

''நான் தான் பறவைகளின் அரசன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பறவைகளுக்கும் ஒரு இராசாவா? கேவலம், நீ மன்னனா?... ஓடிப்போ...!'' என்று 'கடகட'வென நரி மாமா சிரித்தார்.

'அவ்வாறாயின் இத்தடாகத்தின் உரிமையைப் போர் மூலம் பெறுவோம்... இன்றில் இருந்து மூன்றாம் நாள், இதே இடத்திற்கு உங்கள் படையுடன் வருக!... நான் என் படையுடன் வருவேன்...' என்றது வானம்பாடி.

''அற்பப் பதரே! மிருகங்களின் பலம் என்ன? பறவைகள் எங்கே...? ஓடிப் போ... போர்க்களத்தில் சந்திப்போம்...!'' என்றார், நரி மாமா.

மூன்றாம் நாள். மிருகங்களின் படைகள் நிலம் எங்கும் கூடி நின்றன. பறவைகளின் படைகள் வானம் எங்கும் நிறைந்து நின்றன.

நரி மாமா தனது படைக்கு உத்தரவு போட்டார்.

''என் பின்னால் எல்லா மிருகங்களும் அணி வகுத்து வரவேண்டும்! நான் எனது வாலை நிமிர்த்தியபடி முன் செல்வேன்! என் வால் நிமிர்ந்திருந்தால், எல்லாரும் சண்டையில் ஈடுபட வேண்டும்! சில வேளைகளில் தோல்வி கிடைக்க நேரில், எனது வாலைக் கீழே விடுவேன். அப்போது நீங்கள் எல்லோரும் தப்பி ஓடிவிட வேண்டும்...''

இக்கட்டளையை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த பறவை ஒன்று, இதனை அப்படியே வானம்பாடியிடம் கூறிவிட்டதும் வானம்பாடியின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

படைகள் அணிவகுத்து நிற்கின்றன. வானத்தை மறைத்துப் பறவைகள் நிறைந்து இருந்தன. பறவைகளின் தொகையைக் கண்ட மிருகங்களுக்கு மனதுக்குள் பயம் பிடித்து இருந்தது.

''வெற்றி அல்லது வீர சொர்க்கம்'' என்று முழக்கமிட்டபடி நரி மாமா தனது வாலை உயர்த்தினார். மிருகங்கள் அவரின் பின்னால் சென்றன. அப்போது —

வானம்பாடி ஒரு குழவியை அழைத்தது. நரியின் வாலின் கீழ்ப்போய் குத்தும்படி கட்டளையிட்டது.

குழவி ஒருவருக்கும் தெரியாமல் பறந்து போய் நரி மாமாவின் வாலின் கீழ் பலமாகக் கொட்டியது. குழவியின் குத்தலால் திடுக்கிட்ட நரி மாமா, 'பட்'டென்று உயர்த்திய வாலைக் கீழே விட்டார்.

மிருகங்கள் இதனைக் கண்டன. சண்டையில் தோல்வி என்று முடிவு செய்து, பின் வாங்கி ஓடத் தொடங்கின. இதனைக் கண்ட நரி மாமா, திடீரென வாலை உயர்த்தினார். ஓடின மிருகங்கள் நின்றன. குழவி மீண்டும் பலமாகக் கொட்டியது. நரி மாமா மீண்டும் வாலைக் கீழே விட்டார். அவ்வளவு தான் —

மிருகங்கள் பயத்தால் ஓடி ஒளிந்தன. தனித்து நின்ற நரி மாமாவைப் பறவைகள் தாக்கின. அவரும் பயந்து ஓடினார்.

போரில் பறவைகளே வென்றன.

ஃ



## மிருகங்களுக்கு வால்கள் ஏன்?

★ மிருகங்களின் வால்கள் பல வகைகளில் அவற்றிற்கு உதவுகின்றன. குரங்குகள் வால்களினால் மரக் கிளைகளைச் சுற்றிப் பிடிக்கின்றன; மூன்றாவது கையாகக் குரங்குகளுக்கு வால் இருக்கின்றது. முதலைகள் தமது வால்களை நீந்துவதற்கும், உணவுக்குரிய விலங்குகளை அடித்து வீழ்த்துவதற்கும் உபயோகிக்கின்றன. அணில்கள், மரத்துக்கு மரம் தாவும் போது வால்கள் அவற்றின் சமநிலையைப் பாதுகாக்கின்றன. குதிரைகள், மாடுகள் என்பன தம் மீது அமரும் ஈக்களைத் துரத்துவதற்கு வால்களை வீசுகின்றன. பறவைகளின் வால்கள் 'பிறேக்'காகவும், திசை திருப்பிகளாகவும் உதவுகின்றன. ஆண் மயிலின் தோகை, பெண் மயிலைக் கவர்வதற்காக இருக்கின்றது.

★ பாம்புகள் எவ்வாறு ஊர்கின்றன? பாம்புகளுக்குக் கால்கள் இல்லை. ஆனால், அவை நிலத்தில் வேகமாக நகர்கின்றன. உண்மையில் யாம்புகள் நிலத்தில் 'நீந்துகின்றன'. பாம்புகள் தமது உடலை அலை வடிவில் வளைத்து, உந்துவதால் அவை முன்னோக்கி நகர்கின்றன. கரடு முரடான தரையில் பாம்புகள் வேகமாக ஊர்ந்து செல்லும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவளப்பான தரைகளில் உடலை வளைத்து உந்துவது கடினம்; அதனுல், மெதுவாகவே ஊர்கின்றன.

★ வௌவால் உண்மையில் குருடான பறவையன்று. ஆனுல், அதன் கண் பார்வை மிகக் குறைவு. பகல் வேளைகளில், ஒளி நிறைந்து இருப்பதால், கண் கூசுவதால் வௌவால்கள் பார்க்க முடிவதில்லை. இரவு வேளைகளில் பறக்கும் போது வௌவால் ஒரு வகை ஒலி எழுப்பும். அந்த ஒலி எதிரிலுள்ள பொருட்களில் மோதி எதிரொலிக்கும் போது, அப்பொருள் என்ன, வடிவம் என்ன என்பதை வௌவால் உணர்ந்து கொள்கின்றது.


— கமலி




எனது வகுப்பில் ஒரு நாள் தமிழ்ப் பாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர் வந்தார். முதல் நாள் படித்துக் கொண்டு வரச் சொன்ன தொடர்மொழிப் பொருளுக்கு ஒரு சொல் என்ற பகுதியில் இப்பொழுது கேள்விகள் கேட்கப்போகின்றேன். எல்லோரும் உங்கள் புத்தகங்களை மூடுங்கள் என்றுர். நாங்கள் எல்லோரும் புத்தகங்களை மூடிவிட்டு ஆசிரியரின் கேள்வியை எதிர் பார்த்திருந்தோம். ஆசிரியர் ''அரண்மனைகளிலே மகளிர் தங்குவதற்கென அமைக்கப்பட்ட தனியிடம் எது?'' என்று இரண்டாம் வாங்கில் இருந்த பாபு என்பவரைக் கேட்க அவர் எழுந்து 'குசினி' என்றுர். உடனே வகுப்பில் இருந்த மாணவர்களும், ஆசிரியரும் கலீர் எனச் சிரித்தோம்.

த. பாலசிங்கம், காரைநகர்.

# இராச்சத பிராணி



'ஸ்ரிகோ சொறஸ்'

படம்: 'ராலி' விளக்கம்: 'குணு'

'டைனேசார்' என்ற இராச்சத விலங்கினத்தைச் சார்ந்த பிராணியே, ஸ்ரிகோ சொறஸ் என்ற இந்த விலங்காகும். இது தாவர பட்சினியாகும். மலை போன்ற மாமிச வடிவமாக இது பூமி அதிர நடந்து திரிந்தது. இத்தாவர பட்சினிகளின் நீளம் ஏறத்தாழ 80 அடிகளாகும். சிறிய தலையையும், முதுகில் நிமிர்ந்து நிலைத்த 'ஓடு'களையும் இது கொண்டிருக்கும். வலிமையான கால்களைக் கொண்ட இப்பிராணி மிக மெதுவாகவே அசைந்து நடந்து திரிந்தது; இப்பிராணியின் மூளை மிகச் சிறிது. இவ்வினத்தைச் சார்ந்த வேறு சில பிராணிகள், மாமிச பட்சினிகளான இராச்சத விலங்குகளிடமிருந்து தப்புவதற்காக சில வேளைகளில் நீரினுள் மறைந்தும் வாழ்ந்தன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

— அத்தியாயம் ஐந்து —

# 'இப்பிறவியில் நீ யன்றி........'




மாலை என்றும் போலக் கவிந்தது. முற்றத்து வேப்பம் பூ வாசம் இன்னமும் முற்றாக நீங்கி விடவில்லை. விளக்கின் முன்னால் படிக்க அமர்ந்த ராணியால் எதுவும் படிக்கவே முடியவில்லை. கண்கள் அச்செழுத்துகளில் அர்த்தமின்றிச் சென்ற போதிலும் அவள் மனம் கிரகிக்கும் நிலையில் இல்லை.

மூன்று நாட்களுக்கு முன் அம்மன் கோயில் திருவிழாவில் நடந்து முடிந்து போன சம்பவங்கள் தாம் ஓயாது மனவெளியில் எழுந்தன. தங்கள் பகுதியினருக்குள்ளேயே சண்டை வந்துவிட்டதால் ஒருவிதப் போலிச் சமாதானத்தோடு ஆறுந் திருவிழா முடிவுற்றது.

விதானையார் பகுதிக்கும் கந்தையர் பகுதிக்கும் ஏற்பட்ட பிணக்கு வேலுப்பிள்ளை பகுதியினருக்குச் சாதகமாக அமைந்தது உண்மைதான்.

ராணிக்கு ஏனோ தாங்கள் அவ்விடத்துத் தோல்வியுற்றுவிட்டது போன்ற உணர்வே தலை தூக்கி நின்றது. சின்னத்தம்பி மச்சான் தங்கராசாவின் மீது கோபத்தோடு பாய்ந்த போது ஐயா ஏன் தடுத்தார் என்றும் எண்ணினாள். அதே வேளை, சின்னத்தம்பி மச்சானுக்கு ஏதாவது நிகழ்ந்துவிட்டால் என்று அப்பேதையுள்ளம் கலங்கவும் செய்தது.

'மகாலிங்கம் ஏன் எங்களுக்காகக் குறுக்கிட்டான்? நமது நியாயமான சமூக நிலையை மற்றவர் பறிக்கின்ற உண்மையை உணர்ந்ததினாலா? எங்களுக்காக வாதாட அவர்களுக்கும் இடையில் ஒருவன் இருக்கிறான். நீதி தெரிந்த ஒருவன் இருக்கின்றான்'

கனகசிங்கம் அன்றைய கோயில் நிகழ்ச்சியை வர்ணித்த விதம் ராணிக்கு நினைவு வந்தது.

''பார் அக்கா...... படம் கூடத் தோத்துப் போகும். தங்கராசா சும்மா முஷ்டியை மடக்கி மகாலிங்கத்தின் மூஞ்சியிலை விட்டான் ஒரு குத்து... பாத்துக் கொண்டிருந்த எனக்கே அடி வயிற்றைக் கலக்கியது... சும்மா இரத்தம் கொள கொள என்று கொட்டிச்சு... திரும்பிப் பார்த்தால் தங்கராசாவும் விதானையாரும் அலமலக்கா விழுந்து கிடக்கினம்... ஆரும் தம்பியிலை தொட்டால் குடலை எடுத்து மாலையாகப் போடுவன் என்று உறுமியபடி வாமதேவன் நின்றான், அக்கா... தங்கராசா நடுங்கிப் போச்சு... மகாலிங்த்துக்கு உடனே வேஷ்டியைக் கிழிச்சு இரத்தம் துடைச்சு விட்டது நம்மடை அத்தான் தான்...''

முன்பின் பழக்கமில்லாத அந்த மகாலிங்கத்திற்காக அவள் இரக்கப்பட்டாள். மகாலிங்கத்தைச் சில பொழுது கண்டதாக ஒரு நினைவு. கல்லூரிக்குப் போகும் போது கந்தையரின் கடையில் கண்டிருக்கலாம். மனோன்மணியின் அண்ணன் தங்களுக்காக நியாயம் பேசுகிறான். ஆனால், மனோன்மணி...?

குப்பையில்தான் குண்டுமணி கிடக்கும் என்பது சரிதான்.

இரத்தம் 'கொள கொள' வென்று கொட்டிச்சாம்மே?

''அந்தப் பொடியன் உண்மையில் நீதியானவன்தான்... எனக்கு முன்னமே அவன்ரை குணத்தைத் தெரியும்... என்னோடு கதைக்கும்போது கூட 'நீர்' என்று தான் கதைப்பான்... தங்கராசா அடிச்சும் எதிர்த்து அடிக்காது சிரித்தபடி நிற்பதற்கு எவ்வளவு மனத்திடம் வேண்டும்'' என்று வேலுப்பிள்ளை மகாலிங்கத்தைப் புழுகித் தள்ளினார்.

எல்லோருமே அப்படித் தான் கூறினார்கள்.

''பாதிக்கப்படாத அவருக்கு இருந்த ரோசம்... பாதிக்கப்பட்ட எங்களுக்குக் கூடக் கிடையாது...'' என்று சின்னத்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மச்சானும் கூறினர்.

ராணியின் சிந்தனைகள் விரிந்தன. அவள் உள்ளத்தில் ஒரு நினைவு மலர்ந்தது.

'மகாலிங்கத்துக்கு ஒரு தடவை நன்றி கூறத்தான் வேண்டும்!'

அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

இரு நாட்களுக்கு முன் —

எல்லாரும் அடுக்களைக்குள் இருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அவள் தலைவாசல் திண்ணையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள்.

''ராணி...'' யாரோ அழைக்கும் குரல் கேட்டு அவள் எழுந்து நின்ருள்.

சின்னத்தம்பி சற்று விலகி எங்கோ பார்த்தபடி, தலைவாசல் தூணைப் பற்றியபடி நின்றிருந்தான். அவளுக்கு ஏனோ மெதுவாக உடல் நடுங்கியது. அவளை அழைத்தது, மச்சானு? அவள் மௌனமாக நின்றிருந்தாள்.

சின்னத்தம்பியும் வெகு நேரம் பேசாது நின்றிருந்தான். நீண்ட மௌனத்தின் பின் சின்னத்தம்பி அவளைப் பார்க்காமலேயே கேட்டான்.

''என்னை உனக்குப் பிடிக்கவில்லையா...?''

அவள் இத்தகைய கேள்வியை ஒரு போதும் எதிர்பார்த்தவளல்லள். சின்னத்தம்பிக்குத்தான் அவளைத் திருமணம் செய்து கொடுப்பது என்றெல்லாம் வீட்டில் பேச்சுக்கள் அடிபட்டபோது கூட, அவள் அதனைப் பற்றி அவ்வளவு அக்கறைப்பட்டது கிடையாது. அவளுக்குத் திருமணத்தைப் பற்றிய நினைவே எழுந்தது கிடையாது. அவள் சின்னத்தம்பியை மனதிலிருத்தி நீண்ட வேளை சிந்தித்தும் பார்த்தது கிடையாது.

திருமணம் என்பது ஏதோ பெரியோர்கள் தாங்களாகப் பார்த்து நிர்ணயிக்கும் பந்தம் என்று அவள் நினைத்திருந்தாள்.

அவள் மனம் படிப்பு என்ற ஒன்றில்தான் திளைத்தது. படிப்பு ஒன்றினல் தான் உயர முடியும் என்று திடமாக நம்பினுள். அவள் வகுப்பு ஆசிரியை மிஸிஸ் துரையப்பா கூட இதைத்தான் பல தடவைகள் அவளுக்கு வற்புறுத்தினுர்:

''ராணி, சமூக உயர்வு தாழ்வு கல்வியால்தான் இனி மேல் நிர்ணயிக்கப்படும்... தொழில்களால் அல்ல. வெள்ளாளர்கள் படித்துவிட்டு மீன்பிடி இலாகாவில் சேர்ந்து ட்ரோலேர்ஸ்களில் சென்று மீன்பிடிக்கவில்லையா...?'

அவளுக்கு முதலில் தேவை கல்வி; அதை ஓரளவு கரை கண்ட பிறகு அவள் பெற்ருேர் கூறுகிற எவரையும் மணந்து கொள்ளத் தயார். அவன் சின்னத்தம்பியாகவும் இருக்கலாம்.

இக்கட்டான ஒரு கேள்வியைச் சின்னத்தம்பி அவளிடம் கேட்டுவிட்டான். அவள் என்ன பதிலைக் கூறுவாள்?

திகைத்துப் போய் நின்ருள், ராணி.

சின்னத்தம்பி மச்சான் மிகவும் நல்லவன். குழந்தை மனம் கொண்டவன். ஒருவருக்கும் தீங்கு செய்ய நினையாதவன். அவன் மனதில் இப்படி ஒரு கேள்வி ஏன் உருவாகியது?

சின்னத்தம்பியே தொடர்ந்து பேசினன்.

''எனக்கு அழகாகப் பேசத் தெரியாது... நீ என்னை விரும்புகிருயோ இல்லையோ எனக்குத் தெரியாது... ஆனல், ஒன்று மட்டும் உண்மை... நான் உன்னை விரும்புகிறேன்...'' இதனைக் கூறிவிட்டுச் சின்னத்தம்பி வெகு நேரம் தலை குனிந்து நின்றிருந்தமை அவளுக்கு நினைவு வந்தது.

அந்த ஒரு கணம் ராணி அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஏதாவது அவனுக்குக் கூறித்தான் ஆகவேண்டும்.

''எனக்குத் தொடர்ந்து படிக்க வேணும் போலிருக்கிறது...''

இவ்வளவையும் அவள் எப்படிப் பேசி முடித்தாள் என்பதை இப்போது நினைக்கவே அதிசயமாக இருக்கிறது. அவளுடைய அந்தப் பதில் சின்னத்தம்பியின் கேள்விகளுக்குரிய பதிலாக இருந்ததா?

'நான் உன்னை விரும்புகிறேன்' என்று அவன் கூறியபோது ஒரு வகை இனிய மலர்ச்சி அவள் உள்ளத்தில் தோன்றியது போன்றதொரு பிரமை ஏற்படத்தான் செய்தது.

''படிப்பின் பெருமையை நானுணர்கிறேன்... காலங்

---



ஒருவர்: அதிலே போகும் புது மாப்பிளை பொம்பிளையைப் பார்த்தியா?

மற்றவர்: ஓ... அந்தப் புது மாப்பிளைக்கு இது நான்காவது கலியாணம். அந்தப்புதுப்பொம்பிளைக்கு இது ஐந்தாவது கலியாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த உணர்வுதான்.'' என்று கூறிவிட்டு மெதுவாகத் திரும்பி அவளைப் பார்த்தபடி அவன் பேசினான்: ''நீ படிக்கப் படிக்க நீ என்னை விட்டுத் தூர விலகிப் போவது போன்ற உணர்வு எனக்கு ஏற்படுகிறது. இது தாழ்வு மனப்பான்மையால் ஏற்பட்ட உணர்வாக இருக்கலாம்''

அவள் பேசாது தலை குனிந்து நின்றாள்.

''இண்டைக்கு நான் வீட்டுக்குப் போகிறன்... இப்பிறவியில் எனக்கு உன்னை விட வேறொருத்தி மனைவியாக அமையமாட்டாள் என்று தான் நினைக்கிறன்...''

மச்சான் இவ்வளவு அழகாகப் பேசினான்? இவ்வளவு அர்த்தத்தோடு பேசினான்?

அவன் போய்விட்டான்.

அவன் ஏதோ பெரிய உண்மைகளை எல்லாம் தன் தலையில் கொட்டி விட்டுப் போய்விட்டது போல அவள் உணர்ந்தாள்.

அவளால் படிக்கவே முடியவில்லை. மெதுவாக எழுந்து அறைக்குள் போனாள்.

'சுபத்திராவோடு ஏதாவது கதைத்தால் நன்றாக இருக்கும்.'


சுபத்திரா ஏதோ பலமாக யோசித்தபடி பாயில் படுத்திருந்தாள். சுபத்திராவின் போக்கில் என்றும் இல்லாத திடீர் மாற்றம் ஏற்பட்டதை ராணி கவனித்து வந்தாள். எப்போதுமே கலகலப்பாக எல்லாருடனும் பேசியும், சண்டை பிடித்தும் திரியும் சுபத்திரா எப்படி இவ்வாறு மாறினாள்?

கனகலிங்கம் வலியப் போய்ச் சண்டைக்கு இழுத்தாலும் முன் போலச் சுபத்திரா வாக்குவாதப் படுவது கிடையாது.

''சுபத்திரா இப்ப நல்ல குஞ்சு'' என்று கனகசிங்கமே அபிப்பிராயம் தெரிவித்தான். ஆனால், ராணிக்கு அவள் மாற்றத்திற்குரிய காரணம் பிடிபடவே இல்லை. வயது வர வர இயல்பாகவே பெண்களுக்கு அடக்கம் வந்து விடுமா?

பல வேளைகளில் எதையோ பறி கொடுத்தது போலச் சுபத்திரா சிந்தித்தபடி அமர்ந்திருப்பதை அவள் அவதானித்திருக்கிறாள். அவள் சில நாட்களாகத் தங்களோடு சேராது தனித்துப் போய் எதையாவது செய்து கொண்டிருப்பதையும் அவள் கண்டிருக்கிறாள்.





இது என்ன மாற்றம்?

ராணி தனக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்ததைக் கூடச் சுபத்திரா உணரவில்லை. சிறிது நேரத்தின் பின்பே ராணியை அவள் கண்டாள்.

''அக்கா...'' சுபத்திராவின் அழைப்பில் ஏதோ ஒன்று குறைவது போன்றிருந்தது. தங்கையை ஏறவிறங்கப் பார்த்தாள், ராணி. முகத்தில் ஏதோ ஒரு ஏக்கம் படர்ந்திருந்தது.

'சுபத்திரா, இது என்ன?...'

''என்னக்கா...?''

''நீ கொஞ்ச நாளா ஏதோ ஒரு மாதிரி இருக்கிறாயே?...''

''இல்லையே...... எப்போதும் போலத்தானே இருக்கின்றேன்''

''பொய் சொல்கிறாய், சுபத்திரா? உனக்கு என்ன பிடித்தது? சொல்லேன்...''

சுபத்திரா தமக்கையை நோக்கிவிட்டு, 'கலகல'வெனச் சிரித்தாள். அச்சிரிப்புக் கூட வேண்டுமென்று சிரித்தது போல ராணிக்குத் தெரிந்தது.

'நானேன், உனக்குப் பொய் சொல்கின்றேன்... அக்கா. நீ தான் சில நாட்களாக ஒரு மாதிரி இருக்கிறாய்.''

ராணி திடுக்கிட்டாள்; வருத்தம் விசாரிக்க வந்தவனை வருத்தக்காரனாக்குகின்ற நிலைமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணியின் விழிகள் அறையின் மூலையில் எதையோ அதிசயத்தைக் கண்டன போல நிலைத்து நின்றன. சுபத்திராவும் அதைக் கண்டுவிட்டாள்.

"கரப்பான் பூச்சியள் உள்ளே நுழைந்து உடுப்பை அரிக்குது...... அதுதான் 'றங்கு'க்கு ஆமப்பூட்டுப் போட்டுப் பூட்டியிருக்கிறன்..."

"பூட்டுப் போட்டுப் பூட்டிஞல் பூச்சி போகாதா? ஏன் சுபத்திரா, எதையாவது இரகசியத்தை வைத்துப் பூட்டியிருக்கிருயா?..."

அவள் சாதாரணமாகத் தான் கேட்டாள். ஆனல், அவ் வினவால் சுபத்திரா சற்றுத் திகைத்தவள் போலக் காணப்பட்டாள். அவள் முகத்தில் கணப் பொழுது தோன்றி மறைந்த மாற்றத்தை ராணி கவனித்தாள்.

"அக்கா... சாப்பிட வரட்டாம்..." என்று வெளியில் நின்றபடி கண்மணி குரல் கொடுத்தாள்.

"வா, சுபத்திரா சாப்பிடப் போவம்..."

"எனக்குப் பசிக்கவில்லை, அக்கா! நீ போய்ச் சாப்பிடு..."

"உன்ரை நடப்பொன்றும் எனக்குப் புரியவில்லை. எழும்பி வாடி..." என்று ராணி கூறிய போது, அவளது சொற்களில் தெறித்த கோபத்தைச் சுபத்திரா உணர்ந்து கொண்டாள்.

மெதுவாக எழுந்து தமக்கையைத் தொடர்ந்தாள்.

இரவு பத்து மணி வரையில் இருக்கும். ராணி மேசை முன் அமர்ந்து நாளைக்குரிய கல்லூரி வேலையைச் செய்து கொண்டிருந்தாள். சுபத்திரா படுத்திருந்தபடி ஏதோ வாசித்துக் கொண்டிருந்தாள். வேலுப்பிள்ளை தலைவாசல் வாங்கில் படுத்திருந்தார். அடிக்கொரு தரம் எழுந்து ராணியைக் கேட்டார்.

"பிள்ளை, தம்பி வந்திட்டானே...?"

"இல்லை, ஐயா..."

கனகசிங்கம் இன்னும் வீட்டிற்கு வரவில்லை. அவருக்கு இப்போது ஊர் சுற்றுதல் கூடிவிட்டது. என்ருலும், ஒரு நாளும் இவ்வளவு நேரம் வெளியே தங்கியவனல்லன். படத்திற்குப் போயிருந்தால் கூறிவிட்டுச் சென்றிருப்பான்.

படலை திறந்துவிடும் சத்தம் கேட்டது. ராணி எழுந்து முற்றத்திற்கு வந்தாள்.

"அக்கா... உனக்கு ஒரு புதினந் தெரியுமோ?" என்றபடி கனகசிங்கம் வேகமாக ஓடி வந்தான்.

"புதினம் இருக்கட்டும்... இவ்வளவு நேரமும் எங்கை போயிருந்தாய்...?" என்று கோபத்தோடு கேட்டாள் ராணி: "சோதனைக்கு இன்னும் நாலோ ஐந்து மாதம் இருக்கு... நீர் ஊர் சுற்றுகிறீர்..."

கனகசிங்கம் தமக்கையின் கேள்வியைக் கவனிக்காதவன் போலப் பேசினன்:

"நரியன்குண்டடி இப்ப அல்லோல கல்லோலப்படுகுது... கடைக்காரக் கந்தையரைப் பொலீசு பிடிச்சுக்கொண்டு போகுது... கந்தையருக்கு நல்ல அடியாம்..."

வேலுப்பிள்ளை வாங்கை விட்டு எழும்பி உட்கார்ந்தார்.


"ஏன்...?"

"சாராயம் வித்ததுக்குத் தான்... கடைக்குள்ளை ஆறு போத்தல் இருந்துதாம்... வீட்டிலை புகையிலைப் பாடத்துக்குக் கிழை ஒரு பெட்டி இருந்துதாம்... கையும் மெய்யுமாகப் பிடிச்சிட்டான்க...... விதானையாற்றை தங்கராசு தான் சொல்லிக் கொடுத்தது என்று கதைக்கிருன்கள்... கந்தையரோடை வாமதேவனையும் பொலீஸ் ஸ்ரேசனுக்குக் கொண்டு போருன்கள்..."

இவற்றைக் கேட்ட சுபத்திரா, "ஐயோ" என்ருள்.

(தொடரும்)

★



## வாழ்க மணமக்கள்

மணமகன்:-

திருநிறைச் செல்வன்
சி. என். செல்வராஜன்
(ஆசிரிய மாணவர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

மணமகள்:-

திருநிறைச் செல்வி கமலாசனி

நயினதீவு நாகபூஷணி அம்பாள் சந்நிதானத்தில் அண்மையில் நிறைவேறிய இவர்கள் திருமணத்திற்கு சிரித்திரன் தனது அன்பு நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிருன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு நிமிட நாடகம்

# 304 ஜீப்பை எடு

— வெய்யோன் —

இடம்:- பொலிஸ் நிலையம்

நடுத்தர வயதுடைய ஒருவர் பரபரப்பாக உள்ளே நுழைந்து நேராக இன்ஸ்பெக்ரரிடம் செல்கிறுர்.

ஒருவர்:- வணக்கம் இன்ஸ்பெக்டர். ஒரு திருட்டு நடந்து விட்டது. உடனடியாக நீங்கள் அதைக் கண்டு பிடித்துத் தரவேண்டும்.

இன்ஸ்:- (நிமிர்ந்து பார்த்து விட்டு) பதட்டப்படாதீர்கள். உட்கார்ந்து ஆறுதலாக விசயத்தைச் சொல்லுங்கள். (வந்தவர் உட்காருகிறுர்) ம்...இப்போது சொல்லுங்கள். நீங்கள் யார்? திருட்டு எங்கே நடந்தது? திருட்டுப் போன பொருள் என்ன?

ஒரு:- என் பெயர் பரமசிவம் சார். என் வீடு இரண்டு தெருவுக்கு அப்பால் இருக்கின்றது. வீட்டில்தான் திருட்டு நடந்து விட்டது. இரண்டு பவுண் தங்கச் சங்கிலி.

இன்ஸ்:- ஹைற்! மிஸ்டர் பரமசிவம் இப்போ நான் கேட்கிறதுக்கு ஒழுங்காகப் பதில் சொல்லுங்கள். திருட்டு எந்த நேரத்தில் நடந்தது?

பரம:- பட்டப் பகலில் நடந்தது. அதுதான் அநியாயமாயிருக்கிறது சார்.

இன்ஸ்:- பட்டப்பகலிலா? அப்போ நேரம் என்ன இருக்கும்?

பரம:- இன்று காலையில் தான் திருட்டு நடந்தது. பத்து மணியிருக்கும். குளிக்கப் போகும் போது கழட்டி வைத்தது சார். திரும்பி வந்தபோது காணவில்லை.

இன்ஸ்:- அப்படியா? வீட்டில் உள்ளவர்களில் யார் மீதாவது உங்களுக்குச் சந்தேகமுண்டா?

பரம:- யாரை என்று சார் சந்தேகப்படுகிறது. எனக்கு ஒரு தம்பியிருக்கிறுன்.

இன்ஸ்:- அவர் மேலே சந்தேகப் படுகிறீர்களா?

பரம:- நோ, நோ! இப்படியான வேலைகளை அவன் செய்ய மாட்டான். அன்றைக்கு ஒரு நாள் இப்படித்தான் பாருங்கள், இன்ஸ்பெக்டர் ஓர் ஐம்பது ரூபா நோட்டை என் மனைவி மேசையின் மேல் வைத்துவிட்டு மறந்தே போய்விட்டாள். என் தம்பி அதை எடுத்து என்னிடமே கொடுத்திட்டான்.

இன்ஸ்:- அப்படியா? அப்படியென்றால் உங்கள் வீட்டில் வேறு யார் இருக்கிறுர்கள்?

பரம:- என் மனைவியின் தம்பி ஒருவன் இருக்கிறுன்.

இன்ஸ்:- அவன்மீது சந்தேகப் படுகிறீர்களா?

பரம:- அதெப்படி சார். அவன் என் மனைவியின் தம்பியாச்சே! அடுத்து என் அம்மா என் வீட்டிலேயே இருக்கிறு. சதா பூசையறையிலேயே அடைபட்டுக் கிடப்பா. அப்புறம் என் கார் டிறைவர் கனகசபை இருக்கிறுன். பகல்கூட வீட்டில் தான் இருந்தான்.

இன்ஸ்:- அவன் எடுத்திருக்கக் கூடுமென்று சந்தேகப்படுகிறீர்களா?

பரம:- இல்லை சார். அவன் நல்லவன். ஐந்து வருடமாக என்னிடம் வேலை பார்க்கிறுன். அடிக்கடி கார் கியரை மாத்துவானே தவிர என் கார் பாட்சை இதுவரை அவன் மாத்தியதே இல்லை.

இன்ஸ்:- வீட்டிலே வேலைக்காரர்கள் யாராவது உண்டா?

பரம:- அதுதான் சொல்ல வந்தேன் சார். ஒரே ஒரு சமயல்காரி இருக்கிறுள்.

இன்ஸ்:- அப்படியா? அவளுக்கு எத்தனை வயசிருக்கும்?

பரம:- சுமார் முப்பது முப்பத்தைந்து வயதிருக்கலாம்.

இன்ஸ்:- எத்தனை வருடமாக உங்களிடம் அவள் வேலைக்கிருக்கிறுள்?

பரம:- ஆறு மாதத்துக்கு முன்பு தான் வந்து சேர்ந்தாள்.

இன்ஸ்:- பார்வைக்கு எப்படி இருப்பாள்?

பரம:- கண் எந்த நேரமும் பாக்குக் கொட்டை மாதிரி முழித்தபடி இருக்கும். மூக்குக்கூட சப்பட்டையா கொஞ்சம் அசிங்கமாயிருக்கும். ஆமாம் இதெல்லாம் எதுக்காகக் கேட்கிறீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ஸ்:- ஹைற்! திருடின ஆளைக் கண்டு பிடிச்சாச்சு. 304 ஜீப்பை எடு.

பரம:- (பரபரப்புடன்) கண்டு பிடிச்சிட்டிங்களா சார்? உண்மையிலேயே நீங்கள் புலிதான். ஆமாம் யார் சேர் திருடன்?

இன்ஸ்:- திருடனா? திருடி என்று சொல்லுங்கள். திருட்டு விழி, சப்பை மூக்கு; இதே போதுமே அடையாளம். வசதியுள்ள ஒரு வீட்டிலே பட்டப்பகலில் திருட்டுப் போனால் அந்த வீட்டில் உள்ள வேலைக்காரர் தானே திருடியிருக்க முடியும்.

பரம:- (பதறி) ஐயய்யோ!

இன்ஸ்:- ஏன் சேர் பதறுகிறீர்கள்?

பரம:- சார்! திருட்டுப் போன நகையே அந்த வேலைக்காரியினுடையதுதானே! எப்படி சேர் அவள் திருடியிருக்க முடியும்?

இன்ஸ்:- ???

ஃ

## மாத்திரைக் கதை

# மனச்சாட்சி

குளத்துக்கு மேலே தாழ்வாகப் பறந்த குருவி காற்றைப் பார்த்துக் கேட்டது.

''மனச்சாட்சி என்றால் என்ன?''

காற்று உடனே வேகமாக வீசத் தொடங்கியது. குளத்து நீரின் அலைகளைத் தள்ளி எறிந்து தாமரை இலை மேல் கொட்டி விட்டு, குருவியை நோக்கி ''கீழே பார்...'' என்று சொன்னது காற்று.

குருவி கீழே பார்த்தது.

அங்கே —

காலம் முழுவதும் தாமரை இலையைத் தாங்கி நிற்கும் தண்ணீரைத் தாமரை இலை ஒரு நிமிடம் கூடத் தாங்காமல் உருட்டி ஒதுக்கித் தள்ளும் நிகழ்ச்சி தென்படலாயிற்று.

காற்றுக் கூறியது:- ''தாமரை இலையிடம் எது இல்லையோ — அதுதான் மனச்சாட்சி.''

— காசி ஆனந்தன்




புடவைத் தினுசுகளுக்கு

'சிங்காரம்ஸ்'



தங்க நகைகளுக்கு

டைமா நகை மாளிகை

47, செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 20875




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ மூன்றெழுத்து வாழ்வு ★

— கமலா செல்வராஜன்

குழவி எனும் மூன்றெழுத்தாய் அவதரித்து
மழலே எனும் மூன்றெழுத்தால் மகிழவைத்து
பிள்ளே எனும் மூன்றெழுத்தாய் வளர்ந்துவந்து
பள்ளி எனும் மூன்றெழுத்தை நாடியங்கு
கல்வி எனும் மூன்றெழுத்தைக் கற்றதனுல்
அறிவு என்ற மூன்றெழுத்தைப் பெற்றிருக்க
காலம் எனும் மூன்றெழுத்து கடுகிவந்து
குமரி எனும் மூன்றெழுத்தாய் ஜொலித்துநிற்க
காதல் எனும் மூன்றெழுத்தால் கவரப்பட்டு
மணம் என்ற மூன்றெழுத்து பின்னிப்பிணேக்க
மனேவி எனும் மூன்றெழுத்து கௌரவிக்க
வாழ்வு எனும் மூன்றெழுத்து இனிதாய்ச்சொல்ல
மகவு எனும் மூன்றெழுத்தைப் பெற்றுக்கொண்டு
அன்னே எனும் மூன்றெழுத்தை நாடிச் சென்று
தாய்மை எனும் மூன்றெழுத்தை தனதாய்க்கொள்ள
இனிமை எனும் மூன்றெழுத்து வாழ்வில் புகுந்து
பேரன் எனும் மூன்றெழுத்தைக் கொடுத்து நிற்க
வயது என்ற மூன்றெழுத்தை வருடம் விழுங்க
மூப்பு என்ற மூன்றெழுத்தை முன்னேவிட்டு
கிழம் என்ற மூன்றெழுத்தாய் கூனிக் குறுகி
வியாதி எனும் மூன்றெழுத்தை தனதாய்க்கொண்டு
உடல் எனும் மூன்றெழுத்தை உருக்கிச்சென்று
மூச்சு என்ற மூன்றெழுத்தை முற்ருய்ப் போக்கி
உயிர் என்ற மூன்றெழுத்து உயிரே போக
பிணம் எனும் மூன்றெழுத்துப் பெயரைப்பெற்று
சுடலே எனும் மூன்றெழுத்தைச் சுகமாய்நாடி
நிலம் எனும் மூன்றெழுத்தில் அடங்கிப்போமே.

## லயத்துல கேட்டேனுங்க...

பதுளே ஆர். கே. கோபாலன்

பாடுபட்டு, கஷ்டப்பட்டு, பங்கப்பட்டு ஒழைச்சு வாங்கின ஒரு மாச சம்பளத்தையும் கொண்டு போய் பஸ் ஸ்டான்டுல பொக்கட்காரன் களுக்கிட்ட பறிகுடுத்துப்பிட்டு வந்து ஆப்பிழுத்த கொரங்கு மாதிரி முழுச்சுகிட்டு இருக்கிறி களே. இது ஒங்களுக்கே நல்லா இருக்கா? இந்த மாசத்த நாம எப்புடி ஒப்பத்துறது? செலவு கொச்சிக்கா வாங்க கொண்டு போன பணத்தை சேப்படிகாரன் கிட்ட விட்டுட்டுகளே. ஒத்த கடைகாரன்கிட்டயே நெறுங்க முடியாது. பழைய பாக்கி அப்பு டியே இருக்கு. இருக்கிற சில்லரை யில ''கோப்றெட்டி'' கடை யில எதுவும் வாங்குறதுனுலும் கூப்பனேயும் வித்துபுட்டீக.

---

ஒருவர்:- பிச்சைக்காரனுக்கும் இந்தக் கால சாரி அணியும் பெண்களுக் கும் ஒரு ஒற்றுமை உண்டு.

மற்றவர்:- அது என்ன அண் ணுச்சி?

ஒருவர்:- இருவரும் வயிற்றைக் காட்டுகிறுர்கள்.

— ஜோக்கிரட்டீஸ்

போட்டோ ரெக்ஸ்
10, அப்துல் ஜப்பார் மாவத்தை
கொழும்பு 12
- போன்: 35237 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பது நாளும் தான் மூச்சுக்கு முன்னூறு மொறை குடிக்கிறீக. மாசத்தில ஒரு நாள் அதுவும் பணத்தோட போகயில குடிக்காம போனா என்ன? காலங்காத்தால கள்ள குடுச்சுபுட்டு கண்ணு மண்ணு தெரியாம போனா களவெடுக்காம வேற என்ன செய்வாங்கலாம்.

''அரசன் அன்று கொள்ளுவான். தெய்வம் நின்னு கொல்லுவான்னு'' சும்மாவா சொல்லி வச்சாங்க. நீங்க இந்த லயத்துல உள்ள கோழியெல்லாம் ஒவ்வொன்னா களவெடுத்துகின்னு இருந்தீங்க. தோட்டத்தில உள்ள வாழத்தார்களை களவெடுத்துகின்னு இருந்தீங்க. அதனால அந்த ஆண்டவனாப் பார்த்து நல்ல தண்டனையா ஒங்களுக்கு குடுத்து இருக்கிறாரு. என்னைக்கு அடுத்தவங்க பொருள திருடுனா நம்ப பொருள் நம்பள அறியாம போயிறும். ஆமாம்.

★

# 'நிலவுக்கும் ஒருநாள் ஒய்வுண்டு'

— முல்லைத்துறைவன் —

பிரபல தினசரிப் பத்திரிகையொன்றில், பிரபல நாவலாசிரியர் ஒருவர் எழுதும், 'நிலவு' என்னும் தொடர்கதை சில தினங்களாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தது. வாசகர்கள், '**விழுந்து** விழுந்து' படித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் —

வாசகர்கள் கைகளில் பத்திரிகைகள் இருந்தன; கதையைத் தான் காணவில்லை! துருவித் துருவிப் பார்த்தார்கள்; முயன்று முயன்று தேடினார்கள்! ஊகூம்; தொடர் கதை கண்ணிற்படவேயில்லை! ''அது ஏன் வெளிவரவில்லை'' என்பதற்கான குறிப்புக் கூடக் காணப்படவில்லை. தவித்துப் போனார்கள் வாசகர்கள்!!

அடுத்த நாள் —

பத்திரிகை வந்தது. அதிலே கதையும் வந்தது. ஆசிரியரின் குறிப்பொன்றும் இருந்தது :

''வாசகர்கள் மன்னிக்க வேண்டும். நேற்று நமது தொடர் கதை வெளிவராததினால், நமது பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் ஏமாற்றமடைந்திருப்பார்கள் என்பது நிச்சயம். அதற்கு நாம் என்ன செய்ய? நேற்று அமாவாசையல்லவா? அமாவாசையில் நிலவு எப்படி வரும்?!

ஃ


## வெண் நிற ஆடை

பாலிலும் வெண்மை தரும்

★ மில்க் வைற் நீல சோப்

★ மில்க் வைற் பார் சோப்

★ மில்க் வைற் சலவைப் பவுடர்

வாங்கிப் பாவித்து உறைகளை அனுப்பி

# பரிசுகளைப் பெறுங்கள்

தொலைபேசி: 7 2 3 3 தந்தி: 'மில்க்வைற்'

## மில்க்வைற் சோப் தொழிற்சாலை

காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.

கிளை: மில்க்வைற் டிப்போ, — 83, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு—13




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பின் அண்ணு,

சிரித்திரன் பார்த்தேன், புதுமைகள் பல கண்டேன். மகுடி: பாராட்டப்பட வேண்டியது. போட்டிக் கூப்பன்: பெரு முயற்சி. குத்துவிளக்கு: அமைப்பு ஆகா!! பஸ் யாத்திரை: வெற்றியின் சின்னம். ஆருந் திருவிழா: பால் போல் இனித்தது. சிரித்திரன் பல்லாண்டு பாரினில் வாழ்க என வாழ்த்துகிறேன்.

கே. கனகசபை, 78 ஏ, பாண்ஸ் பிளேஸ், கொழும்பு-7.

★

ஈழத் தமிழ் ஏடாம் சீர் மிகு சிரித்திரனே, மாதமொரு முறை யாம் நின் வரவு போய் மாதமிரு முறையாய் நல்வரவு தந்து - பின் வாரம் ஒரு முறை ஏறு நடை பயின்று எம்மை மகிழ்விப்பாயாக.

லி. எம். ஜே. குயின்டல், சிலாபம்.

★

அன்றும், இன்றும், என்றும் எம்மை மகிழ வைக்கும் சிரித்திரனே, குறுக்கெழுத்துப் போட்டி என்ற அறிவூட்டும் விருந்தையும், மயான பூமியின் அற்புதப் படைப்பையும் ஒருங்கே அளித்து வாசகர்களை மகிழ்விக்கும் உனக்கு எனது பாராட்டுகள்.

எஸ். எம். ஜமால், இல. 59/20, பேர்த் வீதி, தெமட்டக்கொட.

இம்முறை சிரித்திரன் கண்டேன். அட்டை பிரமாதம். கே. எஸ். பாலசந்திரனின் நாடக மேடை அனுபவத்தில் என்னை மறந்து பல இடங்களில் சிரித்து விட்டேன். ''ஜடாயு செத்துப் போ'' என்னும் இடத்தில் சிரிப்பை அடக்க முடியவில்லை. அவரின் அனுபவங்களை சிரித்திரன் வாசகர்களுக்கும் அளித்ததற்கு நன்றி. சி. குமார், புகுந்த வீட்டின் அழகை மிக துல்லியமாகக் காட்டியுள்ளார். அவருக்கு எமது பாராட்டுகள். கங்காணி யாரை இம்புட்டு நாளா காங்கலையே ரொம்ப விசாரிச்சதா சொல்லுங்க.

த. மகேந்திரன், துரை அன் கோ, பரந்தன்.

★

செங்கை ஆழியான் மயான பூமியில் எமது ஊரான கலட்டியை மிகவும் யதார்த்த ரீதியாக சென்ற இதழில் சித்தரித்திருந்தார். அவருக்கு எனது பாராட்டுகள். சிரித்திரனில் இப்போதெல்லாம் கவிதைகளைக் காணபதில்லையே. ஏன்?

பு. கனகரத்தினம், 73/4 அம்மன் கோவில் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

★

எனது சிகை அலங்கரிப்பு நிலையத்தில் சிரித்திரன் படிப்பதற்கென்று ஒரு கூட்டம் வருகிறது. சிரித்திரன் ஆற்றி வரும் சேவையைப் பாராட்ட வார்த்தைகள் இல்லை. இரட்டை வாய், ஒற்றை செவி போன்ற சின்ன விஷயங்கள் நிறைய போடுங்கள்.

ஜே. எலியாஸ், குடாக்கரை, சீனக்குடா.


★

## சேர்ந்து சிரிப்போம்!

சிரிப்பை நல்கும் சிரித்திரனே
— உன்
சேவை பெரிதும் தேவையடா!
சிரிப்பே உலகில் அருஞ்செல்வம்
— அச்
செல்வம் உன்னில் கொள்ளையடா!
மாதம் பிறந்த மறுகணமே—உன்
மயக்கும் உருவின் ஞாபகமே
சீதள முத்துச் சிரித்திரனே-நிதம்
சேர்ந்து சிரிப்போம் வளர்ந்திடடா!
திங்கள் இருமுறை மலர்ந்திடுவாய்
தீந்தமிழிற் சுவைபல தந்திடுவாய்
பங்கைய மலர்போற் மணம்வீசி
பாகாய் அமுதைச் சிந்திடுவாய்

மூதூர் 'கலைமேகம்', பாலநகர்-2, மூதூர்.

***



கணவன்: உன் புன்னகை எனக்குப் போதும்...... பொன் நகையைக் கழற்றிக் கொடு. அடகு வைப்பதற்கு.


மனைவி: என் புன்னகையைத்தான் நீங்கள் விரும்புவீங்களென்று அறிந்து என் அப்பா எனக்கு செய்து போட்ட நகை எல்லாம் ''கில்லிட்'' நகைகள் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மாறவில்லை

-- சா. ரா. பா. சர்மா --



அன்று யாழ்தேவி வரும் புகையிரத மேடையில் பெரும் கூட்டம். மேடைக்கு ரயில் வரும் முன்பே தெம்பு உள்ள வீரர்கள் ஓடிப் பாய்ந்து எலிகள் போல அகப்பட்ட யன்னல்களுக்கூடாக நுழைந்து இடம் பிடித்துக் கொண்டார்கள். தெம்புக்கு வழி இல்லாதவர்கள் வம்புக்கு ஏன் போக வேண்டும் என்று மெதுவாக ஏறிக் கொண்டார்கள். இவ்வளவு போராட்டத்தையும் யாழ்தேவி பொருட்படுத்தாது ஒரு பெருமூச்சுடன் மேடையில் வந்து நின்றது. ''கோணர் சீற்'' பிடிக்கும் சில கோணேஸ்வரர்கள் பெட்டியை வைப்பதும் பிறகு மேலே வைப்பதும் மீண்டும் அப்படி இப்படித் திருப்பி வைப்பதுமாகக் கொலு வைத்துக் கொண்டிருந்தார்கள். சற்றுத் தூரத்தில் ஒரு பெண் இடமின்றி நின்று கொண்டிருந்தாள். கடைசி வரை எவரும் எழும்பி இடம் கொடுப்பதாகக் காணோம். எதிர்பாராது அப்பெண்ணைப் பார்த்துவிட்ட பிரயாணிகள் அதாவது மூலையில் இடம் பிடித்துக் கொண்டவர்கள் அவளைக் கண்டதும் சொத்தைக் கடலையைத் தின்றவர்களின் முகம் போல ஆகி வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆயிற்று. ரயிலும் புறப்படும் நேரமாகிவிட்டது. வெளியே நின்ற ஒரு பாதுகாப்பு அதிகாரி இப்பெண் நிற்பதைக் கண்டுவிட்டார். உடனே உள்ளே வந்து சிறிது இடம் கொடுக்கும்படி கேட்டார். அவ்வேண்டுகாள் கிணற்றில் போட்ட கல்லாகிவிட்டது. எதற்கும் ஒருமுறைடிக்கட்டுகளைப் பரிசோதித்துவிட்டால் அத்துடன் தனது கடமையும் முடிந்துவிட்டது போல இருக்கும் என்று அந்த அதிகாரி நினைத்தார் போலும். ''டிக்கட் பிளீஸ்'', என்று குழையத் தொடங்கினார். டிக்கட்டுகள் பல அவர் கண் முன் நீட்டப்பட்டன. அதில் 'மேடைக்குச் செல்ல மாத்திரம்' என்று இரு டிக்கட்டுகளின் வாசகம் அவரை மீண்டும் ஊன்றிப் பார்க்கச் செய்தது. ஆம்! அவை புகையிரத மேடைக்குரிய சீட்டுக்கள். அவ்வளவு தான். மூலையில் இடம் பிடித்துக்கொண்டு நண்பர்களின் வரவை வழி மேல் விழி வைத்து எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த இரண்டு மூலை மூர்த்திகளும் சட்டையில் பிடித்து வெளியே தள்ளப்பட்டனர். ''அம்மா! இனி நீங்கள் ஏதாவது ஒரு ஆசனத்தில் இருங்கள்'' என்று கூறிவிட்டு அந்த அதிகாரி மறு பெட்டிக்குத் தாவினார். அப்பெண்ணும் நன்றி கூறிவிட்டு தனது பெட்டியைக் கால் இடுக்கில் போட்டுவிட்டு அதில் ஒரு மூலை ஆசனத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். யாழ்தேவியும் எக்காளச் சிரிப்புப் போன்று ஒரு முறை கூவிவிட்டுத் தனது ஓட்டத்தைத் தொடங்கியது. அதன் சக்கரங்களில் ஏற்பட்டுக் கொண்டிருந்த சத்தம் ''மனிதன் மாறவில்லை மனிதன் மாறவில்லை'' என்று சொல்லிக் கொண்டு ஓடுவது போல இருந்தது.

மகள்:- அப்பா! பிறந்த இடமும் புகுந்த இடமும் என்கிறார்களே. அப்படியென்றால் என்ன?

அப்பா:- பிறந்த இடமென்றால் நீ பிறந்து வாழ்ந்த இப் பெரிய வீடு. புகுந்த இடமென்றால் கொழும்பில் வேலை பெற்று ரயில் வாகன் மாதிரிச் சிறிய அறை எடுத்து புகுந்து இருக்கிறாயே. அது தான் புகுந்த இடம்.

— சா. ரா. பா. சர்மா


பிறவுண்சன்

## பிஷ் மக்ஸ்

இப்பொழுது உங்கள் வளர்ப்பு மீன்களுக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கிறது.




பிறவுண்சனின் பிஷ்மக்ஸ் மீன்களின் இயற்கை உணவாகிய 'பிளாங்ரன்' சேர்க்கப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிமயமாக இருக்க



ஏன் உன் கணவர் கோபித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்?

'ஜெகஜோதி' பற்பொடி வேணுமாம். கடைக்குப் போய் அதை வாங்கி வந்து பல் தேய்த்த பிறகுதான் காப்பியே சாப்பிடுவாராம்.



ஆசிய ஜோதி யார்?

பண்டித ஜவஹர்லால் நேரு

வெறிகுட்! ஜெகத்துக்கே ஜோதி?

பற்களை தூய்மையாக வைத்து வெண்ணிறப்படுத்தி உறுதிப்படுத்தும் ஜெகஜோதி பற்பொடியே!

சபாஷ்! நூறு மார்க்குகள்.



''குருதேவா தங்கள் ஆன்ம ஜோதியை ஜொலிக்கச் செய்ய குருதெனிய ஜெகஜோதியைக் கொண்டுவந்திருக்கிறேன் பிரபோ!''

கொண்டுவா இங்கே!

இன்றுதான் என் தவத்தின் பயனை அடைந்தேன்.



ஆகா! என்னே உன் அழகு தக்காளிப்பழ மேனி, மூன்றும் பிறை நெற்றி, மயக்கும் விழி! முத்துப்போன்ற பல் வரிசை.

அப்படியல்ல என் கண்ணாளா ஜெகஜோதி பற்கள் என்று சொல்லுங்கள்.



என்ன உங்கள் வயது 102 என்கிறீர்கள் அதெப்படி? ஒரு பல்கூட விளாமல் உறுதியாக இருக்கின்றது. சொல்லும் சுத்தமாக இருக்கின்றது.

'ஓ'...அதுவா நான் உபயோகிப்பது ஜெகஜோதி பற்பொடியை. அதுதான்பல்லையும் காக்கும் உயிர்த் தோழன்.



முதலாளிகிட்ட போய் பல்லைக் காட்டினால் சம்பளம் கூட கொடுப்பார்னியே திட்டு தான் கிடைச்சது போ!

ஐய்ய! உன் காவி படிந்த கரை படிந்த பல்லையா காட்டுவது? ஜெகஜோதி பற்பொடியைப்போட்டு நல்லா தேய்ச்சுவிட்டு பிறகு போய்ப்பார்.

# ஜெகஜோதி அன் கொம்பனி

**குருதெனியா, கண்டி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனைவி:- (கோபமாக) போயும் போயும் ஒரு குடிகார ஆளாகப் பார்த்து நம்ம வீட்டுப் போஷனை வாடகைக்குக் கொடுத்திருக்கிறீர்களே.

கணவன்:- நீதானே சொன்னாய்? குடியும் குடித்தனமுமாக இருக்கிற ஆளாகப் பார்க்கும்படி.

மனைவி:- ?......?......?

— சா. ரா. பா. சர்மா
கிருண்பாஸ்

ஈழத்தின் நகைச்சுவை எழுத்தாளர்களில் திரு. பொ. சண்முகநாதன் குறிப்பிடத்தக்கவர். 'கொழும்புப் பெண்', 'வெள்ளரி வண்டி' என்பன ஏற்கனவே வெளிவந்த இவரது நூல்கள். இப்போது 'பெண்ணே நீ பெரியவள் தான்' என்ற நகைச்சுவைக் கட்டுரைகளின் தொகுதி ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்நூல் சமூகத்தின் குறைபாடுகளை நகைச்சுவையோடு விபரிக்கின்றது. சமூகத்தின் பல்வேறு குணவியல்புகளுடைய பாத்திரங்களை இந் நூலில் ஆசிரியர் அறிமுகப்படுத்தியிருக்கும் பாங்கு போற்றுதற்குரியது. ஆசிரியரின் தெளிவான நடையும், நகைச்சுவைகளை ஏற்ற விடத்துப்புகுத்தியிருக்கும் சிறப்பும் உள்ளத்தில் உவகைச் சுவையை ஏற்படுத்துகின்றன. பேச்சாளர், ஆசிரியர், கண்டக்டர், குடும்பத் தலைவர், மாணவன், அயலவர் என்ற இன்னோரன்ன பாத்திரங்களும் நகைச்சுவையோடு இந்நூலில் விபரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவை சிரிப்பதற்குரியனவாக மட்டும்




அமைந்துவிடவில்லை. சிந்திப்பதற்கும் உரியனவாக உள்ளன. இந்நூலை அனைவரும் படிக்க வேண்டும். விலை: 1/25. பொ. சண்முகநாதன், சங்குவேலி, மானிப்பாய் என்ற முகவரிக்கு எழுதிப் பெறலாம்; பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

— கமலி

தெய்வ வழிபாட்டிற்கும் உங்கள் இல்லங்களை வாசனையாற் பரிமளிக்கச் செய்யவும்
நறுமணம் கமழும் மனோரம்மியமான

# "ராதா"

99 ஸ்பெசல் ஜவ்வாது வத்தி — 999 ஸ்பெசல் ஜவ்வாது வத்தி
சக்தி பூஜா அகர் பத்தி — பத்மினி ஜவ்வாது வத்தி
மற்றும்
லீலா ஜவ்வாது: ஸ்பெசல் அம்பர்: இந்திராணி: கிறீன் தாபார்
வத்திகளையே உபயோகித்து ஆனந்தமடையுங்கள்!
இலங்கையில் முதல் தரமான தயாரிப்புகள்.
எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்துகள், மருந்துச் சரக்குகள், வாசனாதிகள் வியாபாரம்)

53, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன் — 541, 7068

''பாலேந்திரா பில்டிங்''
செட்டியார் தெரு,
கொழும்பு-11
போன்: 35825



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் சிரிப்பு

நிற்பவர்:- உன்னுடைய படகில் எத்தனை பேர் பயணம் செய்யலாம்?

படகுக்காரர்:- ஏறத் தாழ நாற்பது பேர்.

நிற்பவர்:- (திடுக்கிட்டு) என்ன? ஏறினால் தாழ நாற்பது பேரா? வேண்டாம் போ.

— சா. ரா. பா. சர்மா,
கிருண்பாஸ்.

❋

பொலிஸ்: பஸ்ஸுக்குள் இடமிருந்தும் கூரையில் இருந்து ஏன் பிரயாணம் செய்தாய்?

பிரயாணி: மன்னித்துக் கொள்ளுங்க. அடிக்கடி புகைக்க வேண்டும். பஸ்ஸுக்குள் புகைக்க முடியாது. அதனால் தான் டிக்கட்டை வாங்கிக் கொண்டு பஸ்ஸின் கூரைக்கே போய்விட்டேன்.

— கே. எம். பாறூக்.
பதியதளாவ

❋

திரு: நான் உத்தியோகத்தை ராஜினாமாச் செய்யப் போகிறேன்.

திருமதி: ஏன்?

திரு: ஓவர் ரைம் செய்ய முடியாதாம். சம்பளம் கட்டாது.

திருமதி: ராஜினாமாச் செய்து விட்டு?

திரு: சீதனக் காணியில் வெங்காயம் நடப்போகிறேன்.

— சித்திரவேல், செய்திப் பிரிவு,
கொழும்பு.

❋

குரங்கு ஒன்று மரத்தில் தாவிச் சென்றுகொண்டிருக்கின்றது.

ஒரு தமிழன்: இந்தக் குரங்குகளைக் காணத் தமிழனின் ஞாபகம் தான் எனக்கு வருகுது.

மற்றத் தமிழன்: ஏன்?

ஒரு தமிழன்:- மரத்தில் இருந்து விழுந்த குரங்கை மறுபடி குரங்குக் கூட்டம் ஏற்க மாட்டாது. ஒரு சாதியில் இருந்து மறு சாதியுக்கு போனவனைத் தமிழன் ஏற்க மாட்டான்.

— திக்கவயல் தர்மகுலசிங்கம்

❋




கலியாணத் தரகர்:- நான் ஊரில் உள்ள எல்லாப் பெண்களுக்கும் கல்யாணம் செய்து வைத்து விட்டேன். என்னுடைய மகளுக்குத் தான் இயலாமல் போய்விட்டது.

மற்றவர்:- ஏன்?


கலியாணத் தரகர்:- அவள் யாரோ ஒருத்தனோடு ஓடிவிட்டாள்.

— அதிமதுரம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிந்தெட்டிக் ஆடை வகைகளில்

நாங்கள் பெருமையுடன் அளிக்கும் புதிய படைப்புகள்

சீமா சாரிகள் மற்றும்

நங்கையர் அணியும்

நாகரீக ஆடைகள்

# சீமா சில்க் இன்டஸ்ரீஸ் லிமிட்.,

திருநெல்வேலி

யாழ்ப்பாணம்

தந்தி: சீமாசில்க் தொலைபேசி: 7170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம்:- கியூபி69/800


தா தையின்னு குதிக்கிறதை விட்டு தை தையென்று சொன்னேன். கேட்டியாடி ? தையல் தெரியாததினாலேதான் பெண் பார்க்க வந்தவங்க உன்னை வேண்டாமின்னுட்டாங்க 'முயல் மார்க்' நூல்லே எவ்வளவு சீக்கிரமாகத் தையல் பழகலாம் தெரியுமா?



முயல் மார்க் நூல் தரமானது உரமானது

வானவில் வர்ணங்களில் வகைவகையான "முயல் மார்க்" தையல் நூல்களை எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள் :

சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி,

கொழும்பு-12.


67, பிறவுண் வீதியில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால், 234, கே. கே. எஸ். வீதியிலுள்ள ஸ்ரீ லங்கா அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org